[illegible]

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus 3:2 " Follow peace with all men" - Hebrews 12:14

MARCH 2009

உங்களுடைய பாதைகளில் கர்த்தருடைய வெளிச்சம் பிரகாசிக்கும்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை

அன்புள்ள தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

"கர்த்தர் நல்லவர்". ஆம், *"சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்"* (சங்.73:1) என்று வேதம் கூறுகிறது. அன்பானவர்களே! கர்த்தர் உங்களை நடத்திச் செல்லும் பாதைகளைக்குறித்து முறுமுறுக்கவேண்டாம். தேவனிடத்தில் அன்புகூருகிற உங்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும். ஆகவே, *"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்"* என்று பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கே சபைக்குக் கூறியுள்ளார்.

கர்த்தருடைய பிள்ளைகளின் குடும்பத்தில் புருஷன், மனைவி, பிள்ளைகளிடம் காணவேண்டிய ஒற்றுமையைப் பிசாசானவன் இந்நாட்களில் சீர்குலைத்து வருகிறான். சிறுபிள்ளைகளும், வளர்ந்த பிள்ளைகளும், கல்வியில் தேர்ந்த பிள்ளைகளும், பெற்றோரது புத்திமதிகளைக் கேட்டு நடத்தல் வேண்டும். பிள்ளைகள் தங்கள் விருப்பம்போல நடப்பார்களாயின் வருங்காலத்தில் மிகுந்த வேதனைக்குள்ளாவார்கள். விசுவாசிகள் இதனை ஓர் எச்சரிப்பாக எண்ணி, தங்களது பிள்ளைகளுக்கு நல்வழியைப் போதிப்பார்களாக.

தேவனுடைய ஊழியர்களது குடும்பத்திலும் ஒழுங்கற்றுத் திரிகிற பிள்ளைகளைக்குறித்த பாரம் என்னை வருத்துகிறது. பின்விளைவுகளை நோக்காமல் அவர்கள் தங்களது நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கின்றனர். கர்த்தருடைய ஊழியர்கள் தங்களுடைய பிள்ளைகளைக் கண்டித்து, அடக்கி வாழவேண்டும். ஏலி, தன் பிள்ளைகளைக் கண்டித்து உணர்த்தாத பாவத்தினால், அவர்கள் பேலியாளின் மக்களாகக் காணப்பட்டனர். அதனால் தேவன் அவர்களுக்கு என்றும் நீங்காத ஒரு நியாயத்தீர்ப்பை வழங்கினார் (1 சாமு.3:13) என்று அறிவீர்களாக.

தேவன் ஊழியத்திற்காகக் கொடுக்கும் பணத்தை, சில ஊழியர்கள் ஊழியத்தின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தாது, தேவன் விரும்பாதவிதங்களில் செலவுசெய்கின்றனர். தாறுமாறாக நடத்தல், புசித்தல், குடித்தல், களியாட்டுக்களில் நேரத்தையும் பணத்தையும் விரயம்செய்தல் போன்ற செயல்கள் அவர்களுக்குச் சாபத்தையே வரப்பண்ணும். ஊழியர்கள் தங்களைத் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்வார்களாக.

ஊழியர்களே! கனிகொடுக்கிறவர்களாக வாழுங்கள். கனிகொடுக்காத மரம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்ற வேத வார்த்தைகளை உணருவீர்களாக. ஊழியர்கள் வீணான வார்த்தைகளைத் தங்கள் நண்பர்களோடு பேசி, தங்கள் பொன்போன்ற நேரத்தை வீணடிக்கின்றனர். தொடர்ந்து இவ்வாறு நேரத்தை வீணடிக்கும் ஊழியர்களை, தேவன் தண்டிப்பார். மேலும், இவ்வாறான ஊழியர்களது ஊழியமும் சீக்கிரமாகவே சீர்குலையும். அவர்களது ஊழிய அழைப்பு, பேரிழப்பாக வந்து முடியும்.

நான் எனது 55 ஆண்டு ஊழியத்தில் தேவனது கிருபையால், காலத்தை வீணாகச் செலவு செய்ததில்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும். அதனால்தான், இந்நாள்வரை அவரது ஊழியப்பாதையில் அசையாது நிலைத்து நிற்க, தேவன் உதவிசெய்துவருகிறார்.

இந்நாட்களில், தேவன் தாமே தம்முடைய ஊழியர்களைப் பரிசுத்தமாகக் காத்து, ஊழியத்தில் வெகுவாக அவர்களைப் பயன்படுத்துவாராக.

அன்புள்ள

R. K. Sam...

உங்களுடைய பாதைகளில் கர்த்தருடைய வெளிச்சம் பிரகாசிக்கும்

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம்)

"தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று கூறினவுடனே வெளிச்சம் உண்டாயிற்று என்று வேதம் கூறுகிறது. மனிதனுக்கு வெளிச்சம் தேவை என்பதைத் தேவன் அறிந்ததினால் பகலை ஆள மகத்தான சூரியனையும், இரவை ஆளச் சந்திரனையும் படைத்தார். மக்கள் இருளை வெறுப்பர் அன்றோ?

இஸ்ரவேலரை வனாந்தரப் பாதையிலே பகலிலே மேகஸ்தம்பத்தினாலும் இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும் தேவன் வழிநடத்தினார். நாம் இப்போது வாழும் விஞ்ஞான உலகில் பலவித மான மின் ஒளிசாதனங்கள் பயன்படுத்தப்படு கின்றன. எனினும், நம் பாதைகளில் கர்த்தர் தரும் வெளிச்சமோ மிகச் சிறப்பானது.

"நீர் ஒரு காரியத்தை நிருணயம்பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதை களில் வெளிச்சம் பிரகாசிக்கும்" (யோபு 22:28).

யோபின் நண்பர்களுள் ஒருவனான எலிப் பாஸ் கூறும் சொற்கள் இவை. யோபைப் பலவிதங் களில் குற்றஞ்சாட்டிப் பேசின அவனுடைய நண்பர் கள், தேவனை அறிந்த விசுவாசிகளாகத்தான் இருந்திருப்பர். தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பின் அடிப்படையிலேதான் நாம் இங்குச் செய்தியைக் காணப்போகிறோம்.

எலிப்பாஸ் யோபைப் பார்த்து, *"உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்"* என்றான். யோபு 22:21-30 வரையில் காணும் வசனங்களிலுள்ள நிபந்தனைகளை நாம் நிறைவேற்றும்போதுதான் நமது பாதைகளில் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று எலிப்பாஸ் கூறியுள்ளான். என்ன நிபந்தனைகள்? தேவனோடு பழகி சமாதான மாயிருத்தல்வேண்டும்; பிரமாணங்களை ஏற்று இருதயத்தில் அவற்றை இருத்திக்கொள்ளவேண் டும். சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பவேண்டும் என்பனவாகும்.

இப்புதிய ஆண்டில் கர்த்தர் உங்களை முகமுக மாய் நோக்கி, "உங்கள் பாதைகளில் வெளிச்சம் பிர காசிக்கும்" என்கிறார். 'பாதை' என்பது கிறிஸ்தவ வாழ்வைச் சுட்டிக்காட்டும் சொல்லாகும். இவ் வசனத்தில், 'பாதை' என்ற ஒருமைச்சொல் கூறப் படாமல், 'பாதைகள்' என்றுள்ள பன்மைச்சொல் கூறப்பட்டுள்ளது காண்க.

'வழி' என்ற சொல்லிற்கும், 'பாதை' என்ற சொல்லிற்கும் வேறுபாடு உண்டு. 'வழி' என்பது அறியப்பட்டது; நீளமும் அகலமுமானது. ஆனால், 'பாதை' என்பது அறியப்படாததும், கரடுமுரடான இடங்களில் காணும் ஒற்றையடிப் பாதையைக் குறிக்கும். மனிதனது அடிச்சுவடுகளினால் ஏற்படும் ஒற்றையடிப் பாதையைத்தான் இது பொருள்படுத் தும்.

யோவான் ஸ்நானன் கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ண இவ்வுலகில் அவதரித்தான். பாதையை நேராக்குவதுதான், வழியை ஆயத்தம் பண்ணுவது என்று இங்குக் கூறப்பட்டுள்ளது. ஆம், வழியை ஆயத்தம்பண்ண, பாதையை நேராக்க வேண்டும்.

தமிழில் எளிய நடையில் மொழிபெயர்க்கப் பட்ட, "பரிசுத்த பைபிள்" என்ற வேதாகமத்தில், *"உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக் கும்"* என்றுள்ள வசனம், *"உன் எதிர்காலம் ஒளி மயமாகும்"* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தில், *"உனது எதிர்காலம் பிர காசிக்கும்"* என்று கூறப்பட்டுள்ளது. ஆம், இப்புத் தாண்டில் நமது எதிர்காலம் ஒளிமயமாகப்போவது மெய்யே.

கிறிஸ்தவ வாழ்க்கையின் பல்வேறுவிதமான பாதைகளைக்குறித்து வேதாகமத்தில் காணலாம். அவற்றில், சிறப்பாக மூன்று பாதைகளைக் குறித்துக் கீழே காண்போம். அவை அவமதிப்பின் பாதை, ஆபத்தின்பாதை, அறியாத பாதை என்பன வாகும்.

1. அவமதிப்பின் பாதை

"என் பாதையைக் கெடுத்து, என் ஆபத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார்கள்; அதற்கு அவர்களுக்கு ஒத்தாசைபண்ணுகிறவர்கள் தேவையில்லை" (யோபு 30:13).

யோபின் வாய்மொழிகள் இவை. ஆம், யோபு செல்லுகிற பாதையை மக்கள் கெடுத்துப்போட்ட னர். *"என்னுடைய திட்டங்களையெல்லாம் அவர் கள் கெடுத்து, தந்திரமாய் என்னை வேதனைப் படுத்துகிறார்கள்"* என்று வேதத்தின் விசேஷ மொழியாக்கமொன்று கூறுகின்றது. யோபின்

திட்டங்களைக் கெடுத்தவர்கள் அவனது குடும்ப அங்கத்தினர்களும் அவனுக்குக் கீழே வேலை செய்தவர்களுமே.

"வலதுபாரிசத்தில் வாலிபர் எழும்பி, என் கால்களைத் தவறிவிழப்பண்ணி, தங்கள் கேடான வழிகளை எனக்கு நேராக ஆயத்தப்படுத்துகிறார் கள்" (யோபு 30:12).

யோபின் பாதைகளிலே வாலிபர் அவனைத் தவறி விழப்பண்ணினர். தடைகளைப் போடுவித்த னர். அவனது மரியாதையையும் மதிப்பையும் சீர் குலைத்தனர். அவனுக்கு ஏற்பட்ட வியாதியினிமித் தம் அவன் மற்றவர்களுக்குப் பாட்டும் பழமொழியு மானான். மேலும், அவன் முகத்துக்கு முன்பாகத் துப்பவும் கூசாதிருந்தனர் அவனிலும் இளைஞர். *"இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங்கூட வெட்கப் பட்டிருப்பேன்"* (யோபு 30:1) என்றான் யோபு. யோபின் நிந்தை அவமானம் சொல்லில் அடங்காதது. அவனது சிறுமை வர்ணிக்க முடியா தது. யோபு நோய்வாய்ப்படுவதற்கு முன்னர் அவ னுக்கு இருந்த பெருமை, மரியாதை இவைகளின் மதிப்பு அளவிடற்கரியது.

"அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள்; அதி னால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரி லும் பெரியவனாயிருந்தான்" (யோபு 1:3).

இத்துணைச் சீரைப்பெற்ற யோபின் நற் சாட்சியை அவனது மனைவியும் பிசாசுங்கூட பாராட்டினர். ஆனால் அவனோ தன் வியாதியின் நேரத்தில் அனைவராலும் நிந்தையையும் அவ மானத்தையுமே அநுபவித்தான். அவன் இவை களை எவ்விதம் சகித்தான்?

"அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தி னால் இருளைக் கடந்துபோனேன்" (யோபு 29:3).

கர்த்தர் தந்த தீபம்—வெளிச்சம்—அவன் தலையின்மேல் பிரகாசித்துக்கொண்டிருந்ததால் மட்டுமே, அவனது இருளின் பாதையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவனது எதிர்காலம் ஒளிமயமாக மாறினது. அந்த ஒளியினால் அவனுக்குக் கிடைத்த நன்மைகள் இரண்டு. அவன் நன்மதிப்பைப் பெற் றான்; அவனுக்கு நல்ஆரோக்கியம் கிட்டியது.

"அப்பொழுது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப் பாரும்போய், கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி னார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவ னுக்குத் தந்தருளினார்.

கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கி லும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்; பதினாலாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங் களும், ஆயிரம் ஏர்களும், ஆயிரம் கழுதைகளும் அவனுக்கு உண்டாயின" (யோபு 42:9,10,12).

இங்கு, யோபின் வாழ்வில் வீசின ஒளியால் வந்த விளைவுகளைக் காண்கிறோம். கர்த்தர் அவ னுடைய முகத்தைப் பார்த்தார்; அவனுடைய சிறை யிருப்பை மாற்றினார்; முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவ னுக்குத் தந்தருளினார்; அவனது பின்னிலை மையை மிகவும் ஆசீர்வதித்தார். இதனால் அவன் மீண்டும் தன் நன்மதிப்பை—கனத்தை—பெற் றான்.

அடுத்து, அவன் வாழ்வில் ஒளி வீசியதால் அவனது ஆயுள் காலம் நீடித்தது. வியாதிக்குப் பின்பு திட ஆரோக்கியத்துடன் நூற்று நாற்பது வருடம் உயிரோடிருந்து, தனது பிள்ளைகளின் நான்கு தலைமுறைகளைக் கண்டான்.

அன்பானவர்களே! கர்த்தர் இன்று தீர்க்க தரிசனமாக உங்களை முகமுகமாய்ப் பார்த்து *"உன் பாதையிலே வெளிச்சம் பிரகாசிக்கும்"* என்கிறார். இதைவிட வேறு மகிழ்ச்சி உண்டோ? கர்த்தர் பாரபட்சம் காட்டுகிறவரல்ல என்பதை விசுவாசித்து, மகிழ்ச்சியடைவீர்களாக.

2. ஆபத்தின் பாதை

"என் ஆவி என்னில் தியங்கும்போது, நீ என் பாதையை அறிந்திருக்கிறீர்; நான் நடக்கிற வழி யில் மறைவாக எனக்குக் கண்ணிவைத்தார்கள்" (சங்.142:3).

"தாவீது அவ்விடத்தைவிட்டுத் தப்பி, அதுல் லாம் என்னும் கெபிக்குப் போனான்; அதை அவ

சகோதரரும் அவன் தகப்பன் வீட்டார் அனைவரும் கேட்டு, அங்கே அவனிடத்துக்குப் போனார்கள்" (1 சாமு.22:1).

தாவீது சவுலின் கைக்குத் தப்ப, அதுல்லாம் என்ற குகையில் ஒளிந்துகொண்டிருந்தபோது எழுதின சங்கீதம் இது, என்று வேத விற்பன்னர் கூறுகின்றனர். தாவீதைக் கொல்லும்படியாக சவுல் ஊர், ஊராக அவனைத் துரத்தினான். ஆவியில் தியங்கும் இப்பாதையை, "ஆபத்தின் பாதை" என்று அழைப்பது சாலவும் ஏற்புடைத்து.

தாவீது தன்னுயிர்தப்ப வனாந்தரங்களுக்கும் அரணான பட்டணங்களுக்கும் ஓடினான். மட்டுமன்றி, *"அன்றையதினம் தாவீது எழுந்து சவுலுக்குத் தப்பியோடி, காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில் போனான்"* (1 சாமு.21:10). தாவீது அந்நிய தேசமான மோவாபுக்கும் சென்று உயிர்தப்பினான் என்பதை இங்குக் காண்கிறோம்.

"நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்" (1 சாமு.27:1) என்று தன் உள்ளத்திற்குள் எண்ணினான்.

தாவீது சென்ற பாதை எத்துணை இருள் நிறைந்தது என்பதைச் சற்றுச் சிந்திப்பீர்களாக. இருளின் உச்ச நிலைமையை அறிந்தால்தான் ஒளியின் அருமையை நீங்கள் உணரமுடியும். *"சவுலின் கையால் மடிந்துபோவேன்"* என்று தாவீது தன் உள்ளத்தில் எண்ணினதை நோக்கின், அது அத்துணை ஆபத்து நிறைந்த பாதை என்றறியமுடியும்.

அன்பானவர்களே! இந்த 2009 ஆம் ஆண்டிலே, என்ன செய்வது? இருக்கிற இடத்திலே இருப்பதா? வலது பக்கம், இடது பக்கம் போவதா? என்று கலங்கித் திகைக்குமாறுள்ள பாதைகளில் நீங்கள் செல்லக்கூடும். சோகமான பாதை, கசந்த பாதை, துக்கத்தின் பாதை, வாய்பேசமுடியாத பாதை, உயிர் தப்பவேண்டிய பாதை போன்ற பாதைகளினூடே நீங்கள் செல்லவேண்டிய நிலை வரலாம். அந்நேரங்களிலும், தேவன் உங்களைக் கைவிடமாட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

"தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான ஸ்தலங்களிலே தங்கி, சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான்; சவுல் அநுதினமும் அவனைத் தேடியும், தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை" (1 சாமு.23:14).

தாவீதைக் கொல்லும்படி சவுல் அநுதினமும் முயற்சி செய்தும் தேவன் அவனது கையில் தாவீதை ஒப்புக்கொடுக்கவில்லை அன்றோ? அதுபோலவே, இந்த 2009 ஆம் ஆண்டு, உங்களது பிராணனை வாங்கத் தேடுகிற எந்த மனிதனிடமும் உங்களை ஒப்புக்கொடுக்கமாட்டார் என்பதைத் தேவன் தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்.

தேவன் தாவீதுக்கென்று ஒரு சிங்காசனத்தையும், மாபெரும் வெற்றியையும் நியமித்து வைத்திருந்தார். அதுபோலவே உங்களுக்கும் இவ்வாண்டு ஒரு உயர்வையும், மாபெரும் வெற்றியையும் வைத்துள்ளார்.

"கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்" (1 சாமு.13:14).

"அவன் குமாரரில் ஒருவனை நான் இராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார்" (1 சாமு. 16:1).

இவ்வசனங்கள் சவுல் இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணும்போதே தாவீதைக்குறித்துக் கர்த்தர் சொன்னவை. எந்தச் சூழ்நிலையும் எந்த மனிதனும் தேவ சித்தத்தைத் தடுக்கவே முடியாது. பிசாசு தேவ சித்தத்தைத் தடுக்க, பல முயற்சிகள் எடுக்கலாம்; பல ஆட்களையும் ஏவிவிடலாம். ஆனால் கர்த்தர் சொன்னது சொன்னதே.

"இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள்; தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்" (2 சாமு.5:3).

"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்" (சங் 18:28).

இங்கு, தாவீது இஸ்ரவேல் ஜனத்தின்மேல் இராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டதைக் காண்கிறோம். அவனது இருள் அகன்றுபோனது. ஆபத்தான வேளையில் வெளிச்சம் பிரகாசித்தது. ஆம், பிரியமானவர்களே! இந்த 2009 ஆம் ஆண்டில் உங்களது ஆபத்து வேளைகளில் மனிதரது சூழ்ச்சிகள் நிறைவேறாதபடி கர்த்தர் உங்களைக்

காத்து, உயர்த்துவார் என்பது திண்ணம். உங்கள் பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும். இருள் அகன்றுபோம்.

அடுத்து, தாவீதின் வெற்றியைக்குறித்து 2 சாமுவேல் 8 ஆம் அதிகாரத்தில் காணலாம். தாவீது பெலிஸ்தரை முறியடித்தான் (2 சாமு.8:1); மோவாபியரை முறியடித்தான் (2 சாமு.8:2); ஆதாதேசர் என்னும் சேபாவின் இராஜாவை முறியடித்தான் (2 சாமு.8:3); சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டினான் (2 சாமு.8:5); உப்புப்பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறியடித்து, கீர்த்தி பெற்றான் (2 சாமு.8:13). இவையனைத்தும் தாவீதுக்குக் கிடைத்த வெற்றியின்மேல் வெற்றியாகும்.

அன்பானவர்களே! இந்த 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு உயர்வுகிடைப்பது மட்டுமன்றி, எல்லாவற்றிலும் வெற்றிமேல் வெற்றியும் கிடைக்கும். உங்களுடைய ஆபத்தின் பாதைகளிலே வெளிச்சம் பிரகாசிக்கும். உங்களது எதிர்காலம் ஒளிமயமாகும்.

3. அறியாத பாதை

"குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்" (ஏசாயா 42:16).

இந்தப் பாதையின் பெயர் என்ன? இன்னதென்று அறியாத பாதையாகும். இது வாழ்வின் எல்லைக் கோட்டின் பாதை என்று கூறினும் மிகையாகாது.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" (எபிரெயர் 11:8).

"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி.12:1) என்றார்.

தேவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, ஆபிரகாம் தன் தகப்பனுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டு, வருங்காலத்தில் தான் சுதந்தரிக்கப்போகும் தேசத்துக்கு, தான் முன்பின் அறியாத ஒரு பாதையில் புறப்பட்டுச் சென்றான் என்று மேற்காணும் வசனங்கள் கூறுகின்றன.

ஆபிரகாம், மெசொபொத்தோமியா பகுதியை விட்டுப் புறப்பட்டு ஆராமுக்கும், அங்கிருந்து கானானுக்கும், பஞ்சத்தின் மிகுதியால் அங்கிருந்து எகிப்துக்கும், பின்னர் மீண்டும் கானானுக்கும் பிரயாணம் செய்தான். ஒரு குறிப்பிட்டக் காலத்தில் அவனது சகோதரனான லோத்திடமிருந்து ஆபிரகாமைத் தேவன் பிரித்தெடுத்தார். ஆபிரகாம் அறியாத ஒரு பாதையில் தேவன் அவனை அழைத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

அவனோ அந்தப் பாதையின் முடிவைக் காணக்கூடாதிருந்தான். அப்போது அவன் இரு பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டியிருந்தது. அவை என்ன? பஞ்சம்; அடுத்து, ஒரு குடும்பப் பிரச்சினை ஆகும்.

கானானில் பஞ்சம் ஏற்பட்டபடியால் தன் வாழ்வின் தேவைகளைச் சந்திக்க, எகிப்துக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. அங்குச் சென்றதால் குடும்பப் பிரச்சினை ஒன்றையும் அவன் சந்திக்கவேண்டியிருந்தது. எகிப்தின் மன்னனான பார்வோன், ஆபிரகாமின் மனைவியான சாராளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள எண்ணினான். ஆனால், ஆண்டவரோ அதை அனுமதிக்கவில்லை.

அன்பானவர்களே! இந்த ஆண்டு நீங்கள் அறியாத பாதையிலே செல்ல நேரிடலாம். அவ்வேளைகளில் நேரிடும் போராட்டங்களையும், குழப்பங்களையும் நீங்கள் மேற்கொள்ளவேண்டும். உங்களது இலக்கைவிட்டு அங்குமிங்கும் விலகக்கூடாது. இருள்நிறைந்த அப்பாதைகளில் தேவன் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வார்.

ஆபிரகாம் அறியாத பாதையில் சென்றபோது, அவன் இரு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான். விசாலமான தேசத்தையும், முடிவில்லாத சந்ததியையும் பெற்றுக்கொண்டான்.

"லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.

நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து,

உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.

நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்" (ஆதி.13:14-17).

மேலே காணும் 17 ஆம் வசனத்தின்படி, ஆபிரகாம் நடந்து திரிந்த அத்துணைப் பெரிய இடமும் கானான் தேசமேயாகும். தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குக் கானான் தேசத்தை வாக்களித்ததை ஆபிரகாம் முன்னரே பெற்றுக்கொண்டான். விசாலமான நிலத்தின் விவரம்குறித்து 13 ஆம் வசனம் கூறுகின்றது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கேயுள்ள நிலங்கள் முழுவதும் ஆபிரகாமுக்குத் தருவதாகத் தேவன் வாக்களித்தார். இது ஆபிரகாம் அறியாத பாதையின் விசாலமான சுதந்தரம் அன்றோ?

ஆபிரகாமின் நாட்களுக்குப் பின்னர், 400 ஆண்டுகள் எகிப்திலே அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேலருக்கு, தேவன் தாம் வாக்களித்திருந்த விசாலமான கானான் தேசத்தை, மீண்டும் சுதந்தரமாகத் தந்தார். தேவனின் வாக்குத்தத்தம்தான் எத்துணை அற்புதம்! அற்புதம்! பொய் சொல்ல அவர் மனிதனல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனுமல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?

"உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்" (ஆதி.13:16).

அடுத்து, தேவன் முடிவில்லாத ஒரு சந்ததியை ஆபிரகாமுக்குத் தந்தார். இது அளவிடக்கூடாத ஒரு சந்ததி. "உங்களுடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்" அல்லது, "ஒளிமயமான ஒரு எதிர்காலம்" உங்களுக்குண்டு என்றுள்ள தேவனின் வாக்கு ஆபிரகாமின் வாழ்வில் எவ்விதம் நிறைவேறிற்று? கீழே காண்போம்.

"அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்" (ஆதி.15:5).

தேவன் ஆபிரகாமை வீட்டிற்கு வெளியே வரும்படி அழைத்தார். எதற்காக? வானத்தை அண்ணாந்துபார்க்க. என்ன செய்யச் சொன்னார்? *"நட்சத்திரங்களை எண்ணக்கூடுமானால் எண்ணு"* என்றார். நட்சத்திரங்களைக் காணக்கூடிய நேரம் இரவன்றோ? நட்சத்திரங்கள் இருளை வெளிச்சமாக்குகின்றவைகளன்றோ? ஆம், புத்திரபாக்கியம் பெறாத ஆபிரகாம், ஈசாக்கின் வாயிலாக வானத்து நட்சத்திரங்களைப்போன்ற, எண்ணிமுடியாத சந்ததியைப் பெற்றான். இன்று, எழுத்தின்படியான இஸ்ரவேலரும், ஆவிக்குரிய இஸ்ரவேலரும் எண்ணிலடங்கார்.

ஆம், ஒவ்வொரு நட்சத்திரமும் ஆபிரகாமின் அறியாத பாதையை—இருளான பாதையை—வெளிச்சமாக்கிற்று. அவன் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்றான். எண்ணிலடங்காத பூமியின் தூளைப்போன்ற சந்ததியைப் பெற்றான் ஆபிரகாம். இந்த 2009 ஆம் ஆண்டில் உங்களது குடும்பமும் சந்ததி சந்ததியாய்த் தேவனைத் தேடும் சந்ததிகளாக மாறுவர். மட்டுமன்றி, எண்ணிலடங்காத புதிய ஆத்துமாக்களும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேருவர்.

அன்பானவர்களே! இந்த ஆண்டில் நீங்கள் செல்லநேரும் அவமதிப்பின் பாதைகளைத் தேவன் மாற்றி, நன்மதிப்பையும் நல்ஆரோக்கியத்தையும் தந்தருளுவார். ஆபத்தான பாதைகளில் செல்லும் உங்களை உயர்த்தி, வெற்றிமேல் வெற்றியைத் தருவார். நீங்கள் அறியாத பாதைகளில் உங்களை நடத்திச் சென்று, விசாலமான இடத்தையும், எண்ணிலடங்காத சந்ததிகளையும் தேவன் அருளிச் செய்வார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.

THE DEEP SPIRITUAL STANDARD
(Pastor M.K. Sam Sundaram)

(Please read the entire chapter of Luke 18)

The Gospel according to St. Luke chapter 18 contains two parables (vv.2-6; 9-14), and three incidents (vv.15-17; 18-23).

When Jesus Christ was in this world, He was mostly with His disciples and often followed by a big crowd of common people with little or no education so much so that He had to use simple illustrations or stories to make them understand deep spiritual truths. A parable, as we understand, is an earthly illustration to elucidate a spiritual truth. Using the parables and incidents, Jesus taught His disciples five invaluable lessons and made them grasp the depth of the truths He was explaining to them. From this chapter we understand that Jesus wanted them to be prayerful, humble, guileless, merciful and grateful. The words of Jesus recorded in this chapter highlight the point that any one who claims to be His follower should set himself a high spiritual standard by being all the five I have mentioned.

Be Prayerful

Luke 18:1-8

There was a widow in a city who went constantly to a judge who honoured the laws neither of God nor of men. She wanted him to grant her justice against her adversary. Although the unjust judge did not pay heed to her plea for a long time, she did not get weary of his apathy but continued to go to him again and again and pester him. At last, the judge said to himself that although he did not fear God nor did he care about men, he would see that the woman got justice, so that she wouldn't keep coming again and again and wear him out.

The truth Jesus taught His disciples was about the need to pray without ceasing. Just as the woman importuned the judge incessantly to vindicate her, in a similar way, children of God should persist in prayer and wait patiently for God to answer their cry.

The point that Jesus wished to drive home was that even if God gave the appearance of unwillingness to answer, like the unjust judge, He would certainly answer prayer, perhaps suddenly and unexpectedly.

In this context I wish to quote verse 2 in Psalm 123: *"... as the eyes of servants look unto the hand of their masters, and as the eyes of a maiden unto the hand of her mistress; so our eyes wait upon the Lord our God, until that he have mercy upon us."* Our eyes should be focused on God and God alone until He has mercy on us.

There is another incident similar to that of the importunate widow appealing ceaslessly to the unjust judge. In II Kings Chapter 4, vv.8-37 we read about the Shunammite woman who was childless, but, through the prophecy of Elisha, got a son. A few years later, the child died. The woman went to meet Elisha, telling nobody, not even her husband about the child's death. When she met Elisha, she fell at his feet and clung to them. She would not leave him till he went with her to raise him from the dead. This incident teaches us that those who expect answers to their prayers should have the tenacity of the Shunammite woman.

Be humble

Luke 18:9-14

This parable also deals with prayer but the lesson Jesus teaches us is different. Here the prayers recorded are the reflections of two characters, namely, a Pharisee and a publican. The Pharisee is a pious man who fulfils the requirements of the law of God. He therefore thanks the Lord for not being like other men (sinners) and even like the publican (a tax collector) who is standing

by. He fasts twice a week and gives a tenth of all he gets.

This prayer is not the kind of prayer God accepts because it is the prayer of a man who commends himself and despises others which is a sin in the eyes of God. By contrast, the publican stands far from the holy place and does not dare to lift up his eyes nor his hands in prayer, but simply and humbly pours out a confession of sinfulness and an appeal for God's mercy in the words, *"God, have mercy on me, a sinner"* (v.13).

Jesus passed His verdict on the two men. While the publican's humble confession made him go home justified, the prayer of the proud and self-righteous Pharisee was not accepted.

In the Book of Daniel, chapter 9, verse 4-19 we have an example of a humble prayer. From the study of Jeremiah in the Scriptures, Daniel learned that the period of exile would last for 70 years. Therefore, he turned to the Lord in supplication for the sins of the people. In his prayer he included himself as we see in his words: *"We have sinned and done wrong. We have been wicked and have rebelled; we have turned away from your commands and laws. We have not listened to your servants the prophets who spoke in your name to our kings, our princes and our fathers, and to all the people of the land."*

Daniel was one on whom an excellent spirit was found and he was righteous before God and the king. He performed his duties conscientiously and prayed three times a day. Such a man as he humbled himself while praying to God and used the word 'we', thus including himself in the category of sinners, and taking the sins of the people and the blame upon himself.

A comparison of the prayers of the Pharisee and the publican will reveal the difference between the two. The publican prayed sincerely entreating the mercy of God. He was conscious of his own sinfulness and he confessed that he was a sinner. He never talked about others' faults but only his own. But the Pharisee felt superior to the publican and therefore was proud of his piety. His attitude of self-sufficiency made him blind to his faults.

The parable thus stresses the fact that God is always ready to receive the unrighteous when they pray to Him humbling themselves and does not heed the voice of the proud.

Be guileless

Luke 18:15-17

Luke records here a real incident. This is the first of the three incidents he records in this chapter.

Here we see mothers bringing their infants to Jesus for Him to place His hands on them and bless them. The disciples of Jesus did not want their Master to be bothered by the women and therefore they stopped them. But Jesus told them to let little children come to Him for the kingdom of God belonged to such as those guileless and gentle ones. He also told them that if any one did not receive the kingdom of God like a little child, he/she would never enter it.

The main difference between an infant and an adult is that infants are guileless and without sin. Therefore Jesus said that unless a grown up man or woman became like a child, he or she would never enter the kingdom of God.

Jesus has shown by His own example that it is possible to be guileless like little children. In I Peter 2:22,23 it is said, *"Who did no sin, neither was guile found in his mouth: Who, when he was reviled, reviled not again; when he suffered, he threatened not; but committed himself to him that judgeth righteously:"*

Jesus did not retaliate when He was unjustly punished; instead, He asked His heavenly Father to forgive them because, whatever they did, they did from ignorance. If we follow in the footsteps of Jesus, we can be guileless like Him. It is this

quality that the Church—the bride of Christ—is expected to have.

Be merciful

Luke 18:18-23

Throughout this chapter the theme of the attitude accepted by God continues. Whether it is prayer or your spiritual or secular life, the criterion is that God should accept it. God is not carried away by your actions. He sees your heart and knows what motivates your actions.

Here is a young man who is said to be a rich ruler. He comes to Jesus, calls Him "Good Master" and asks Him what he must do to inherit eternal life. In Mark 10:17 the young man is said to have run to Jesus and fallen at His feet before Him. An outward show of piety indeed!

Jesus answers him in the manner of a Jewish Rabbi by citing the commandments of God as a test of his outward conduct. The young man answers that he has kept them since he was a boy. Jesus, who knows the thoughts and the secrets hidden in the innermost part of a human heart, tells him that he lacks one thing. The young ruler has considerable amount of wealth and Jesus knows that he has set his heart on it. Therefore, He tells him to sell all his assets, give them to the poor and follow Him. This is the hardest thing for the rich ruler to do because, besides loving his riches, he has no mercy for the poor.

As people who wish to inherit eternal life, we should search our hearts and see if there is anything which the Lord does not approve of, or something He abhors. It is wrong on our part to assume that we are perfect, for there is none perfect in the sight of God. Even when the rich ruler addressed Jesus as "Good Master", Jesus calmly asked him why he called Him "good" for there was no one good except God. In the same way, there is none perfect except God.

Although the young man had kept all the commandments, he failed to keep the most important commandment of Jesus, "Love your neighbour as yourself." He had no mercy for the poor and no love for others. That was the reason why he was most unwilling to give away his assets to the poor and the needy. Now, the saddest thing was, he left the presence of Jesus as a sad man.

The lesson we learn from this episode is that besides examining our heart, we should also set things right in our life. Here we see the young man going away from Jesus with a sad countenance instead of telling Him that He would obey His command if that was the only way to enter heaven. He had no desire to give up his worldly possessions and yet had the lofty desire to inherit eternal life.

Let not worldly possessions be an idol to you. Be merciful to the poor. Be filled with a desire to have eternal life and a desire to please God by striving to be perfect.

Be grateful

Luke 18:35-43

Jesus was approaching Jericho, and there was a blind man sitting by the way side begging. The crowd that was following Jesus went by him. Hearing the noise he inquired what was happening. He was told that Jesus of Nazareth was passing by. As soon as he heard the name of Jesus, he quickly called out, *"Jesus, son of David, have mercy on me."* Although people tried to silence him, he shouted all the more loudly, *"Son of David, have mercy on me!"*

The cry of the blind man made Jesus stop. He ordered him to be brought to Him. When he came near, Jesus asked him what he wanted Him to do for him. The man answered that he wanted to receive his sight. Jesus said, "Receive your sight; your faith has healed you." At once he was able to see and he followed Jesus, praising God.

What made the man who had received his sight follow Jesus and praise God? Wasn't it his gratitude to Jesus the Son of God who gave him the blessing of sight?

Dear children of God, how grateful are you for all the blessings Jesus the Son of God has showered upon you? Do you praise God for the innumerable benefits you have received from Him? The blind man was so grateful to God that he not only praised Him but also wished to follow Him and serve Him.

While Jesus gave the blind man his sight, He told him that his faith had healed him. It was his faith which made Jesus perform this miracle.

Let us for a moment visualize the plight of the blind man who had to earn a living by begging. Without his sight he couldn't distinguish between day and night, for there was utter darkness all the 24 hours. He couldn't get to the place on the road side where he usually sat without the assistance of some kind-hearted person. But now, all on a sudden he was able to see the beautiful things all around him. What a thrill it must have given him! His heart naturally burst with joy and gratitude and he wished to give his entire life to God and praise and exalt Him.

V.43 says, *"When all the people saw it, they also praised God."* It is no exaggeration to say that as a result of seeing the miracle, the whole town received a revival. The people were so astounded by the miracle that they also praised God.

God expects us to have faith to receive miracles, to be grateful to Him for the blessings we receive from Him through His immense grace, to be filled with inexplicable joy and rejoice over the benefits He loads us with every day. Above all, He desires that we should be instruments of revival wherever He has placed us.

Let us therefore have a deep spiritual standard by being prayerful, humble, guileless, merciful and grateful.

ஊழியர் பகுதி

ஜெபவீரன் ஜான் ஹைடு

12. மறைந்தும் பேசும் வீரன்

ஜான் ஹைடு சரீரத்தில் பலவீனராகவேயிருந்தார். அவருக்குக் காதும் சற்று மந்தம். ஆனால், அவர் ஆண்டவரின் கிருபை வரம் பெற்றவர். அவருடைய சரீர பலவீனத்தில் கிறிஸ்துவினுடைய கிருபையின் வல்லமை பூரணமாய் விளங்கிற்று. அவர் பஞ்சாப் மாநிலத்தின் நகரங்கள்தோறும், கிராமங்கள்தோறும் சுற்றியலைந்தார். அவரது அயராத உழைப்பையும், ஆவியின் உற்சாகத்தையும் கண்டு அவரது சகமிஷனெரிமாரும், மற்றும் சக பணியாளர்களும் ஆச்சரியமுற்றனர். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் தாங்களும் புதுப்பெலனும் ஆவியில் உற்சாகமும் பெற்றனர். அவர் மக்களை ஆழ்ந்த அன்புடன் நேசித்ததுபோலவே அவர்களும் அவரை நேசித்தனர். அவரை அன்னிய நாட்டிலிருந்து வந்த ஒரு மிஷனெரியாக அவர்கள் நோக்காமல் தங்களில் ஒருவராகவே அவரைக் கருதினார்கள்; கிறிஸ்துவின் அன்பையும் பரிவையும் அவரில் கண்டார்கள்.

இதற்கு அத்தாட்சியாக ஜான் ஹைடு பஞ்சாப் மாநிலத்துக்கு வந்த ஆரம்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறலாம். மேல்நாட்டிலிருந்து மிஷனெரிப் பணிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஊழியர்கள் முதலாவது அந்தந்தப் பிரதேசத்துக்குரிய முக்கிய சுதேச மொழியை நன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாய் இருந்தது. அதன்படி ஜான் ஹைடு இந்துஸ்தானி மொழியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார். அவர் சற்றுச் செவிடராய் இருந்தபடியால் இந்த மொழிப்பயிற்சியில் அவரால் விரைவில் முன்னேற்றம் காண முடியவில்லை. இதில் சிரமமும் அதிக தாமதமும் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட விரக்தியினாலும் மன வெறுப்பினாலும் சோர்வுற்ற ஹைடு, சுய நம்பிக்கையை இழந்தவராய்த் தம் ராஜினாமா கடிதத்தை மிஷனெரி மேலிடமாகிய சினாடுக்கு

(synod) அனுப்பிவிட்டார். இந்தச் செய்தி அந்தத் திருச்சபையிலுள்ள கிராமப்புற மக்களுக்கு எட்டியது. உடனே அவர்கள் ஒன்றுசேர்ந்து சினாடுக்கு ஒரு மனு அனுப்பினார்கள். அதில் அவர்கள், "மதிப்பிற்குரிய திருச்சபைத் தலைவர்களே, எங்கள் மத்தியில் பணியாற்றுவதற்காகத் தெரிந்தெடுத்து நீங்கள் அனுப்பிய ஜான் ஹைடு எங்கள் இதய பூர்வமான அன்புக்கும் பாசத்துக்கும் உரியவர். அவர் நாங்கள் நாவினால் பேசும் எங்கள் மொழியைப் பேச முடியாமல் இருக்கலாம். ஆனால் எங்கள் உள்ளங்களின் மொழியை அவர் பேசுகிறார். அதுவே நாங்கள் விரும்புவது (Though he does not speak the language of our lips, he speaks the language of our hearts). எனவே அவருடைய ராஜினாமாவைத் தாங்கள் ஏற்கவேண்டாம் என்று நாங்கள் பணிவுடன் விண்ணப்பிக்கிறோம்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அம்மக்களின் இதயத் துடிப்பையும் மிஷனெரி ஜான் ஹைடுவின் மேல் அவர்கள் வைத்திருந்த மேலான அன்பையும், மிஷனெரி மேலவர்கள் பெரிதும் மதித்து, அவர்கள் விண்ணப்பித்தபடியே அந்த ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து இந்தியாவில் கிறிஸ்துவுக்காகப் பணியாற்றும்படி ஹைடுவுக்கு உத்தரவிட்டனர். இதனால் உள்ளத்தில் களிப்பும், புதிய உற்சாகமும் பெற்ற அவர் மொழிப்பயிற்சியில் ஊக்கத்துடன் தொடர்ந்து ஈடுபட்டார். இந்துஸ்தானி மொழியில் மிகத் திறமைபெற்று அதில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்ததுடன், மிஷனெரி வட்டாரத்தில் இந்துஸ்தானி மொழியை மிக நன்றாக அறிந்திருந்தவர்களில் ஒருவராக அவர் ஆனார். பின்பு அவர் உருது, பஞ்சாபி மொழிகளையும் கற்றுக்கொண்டார்.

மிஷனெரிப் பணியில் தான் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக ஜான் ஹைடு நடந்து கொண்டார். அநேக மக்கள் அவர் மூலம் கிறிஸ்துவைக் கண்டனர்; கிறிஸ்துவைச் சந்தித்து அவரால் ஆட்கொள்ளப்பட்டார்கள். பழைய பாவ ஜீவியத்தைத் துறந்து, இரட்சிப்பின் சால்வையைப் பெற்றுப் புது வாழ்வு பெற்றனர். *"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்"* (ஆதி. 32:26) என்று யாக்கோபு தேவனுடன் விடாப்பிடியாகப் போராடியதுபோல் ஜான் ஹைடு இரட்சகர் கிறிஸ்துவின் சமுகத்தில் கண்ணீரோடும், பெருமூச்சுகளோடும் மக்களின் ஆத்துமாக்களுக்காக ஜெபித்துப்போராடினார். அவருடைய விண்ணப்பங்களும் வேண்டுதல்களும் கேட்கப்பட்டன; பஞ்சாப் மாநிலத்திலும், வட இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆன்மீக எழுப்புதல் ஏற்பட்டது. இவ்வளவாய் மக்களின் உள்ளங்களை அசைக்கும் அளவுக்கு அவர் வல்லமை பெற்றிருந்ததற்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட நான்கு முக்கிய குணாதிசயங்களேயாகும்.

1. இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் பேரில் அவர் கொண்டிருந்த தீவிரமும் உறுதியுமான அன்பு. ஒரு சமயம் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் அவரிடம் ஏன் அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும், மனைவிதானே ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் சிறந்த துணையாக இருந்து, அன்புடன் அவனுக்குப் பணிவிடைசெய்யமுடியும் என்றும் கேட்டார்.

ஜான் ஹைடு புன்முறுவலுடன், "அளவில்லா அன்புடன் என்னை நேசித்த என் ஆண்டவருக்கு நான் நன்றியாக ஏதாவது கொடுக்கவேண்டும் என்று அநேக ஆண்டுகளுக்குமுன் தீர்மானித்தேன்; என்னையே பூரணமாக அவருக்கு அர்ப்பணித்து விட்டேன். 'வேறு எவரும் என் வாழ்க்கையில் புகுந்து நான் உம்மேல் வைத்துள்ள நேசத்தில் பங்கு பெற நான் அனுமதிக்கமாட்டேன்' என்று என் இரட்சகருக்கு நான் வாக்குறுதியளித்தேன். நான் திருமணமே செய்துகொள்ளப்போவதில்லை என்றும் முழுவதுமாக நான் அவருக்கே சொந்தமாக இருப்பேன் என்றும் என் ஆண்டவரிடம் சொன்னேன்" என்று அந்த நண்பருக்குப் பதிலளித்தார்.

சிறிதேனும் தவறாது தம் வாழ்நாள் முழுதும் தம் இரட்சகருக்கு அளித்த இந்த வாக்குறுதியில் ஜான் ஹைடு நிலைத்திருந்தார். கிறிஸ்துவே அவருக்குப் போதுமானவராய் இருந்தார். அவரிலேயே தன் உள்ளம் வாஞ்சித்த பூரண நிறைவைக் கண்டார். ஜெபத்தில் அவருடன் பேசி உறவாடுவதில் எல்லையில்லா இன்பம் கண்டார். அவர் அநேக

நாட்கள் மணிக்கணக்காய் ஜெபநிலையில் இருந்ததற்கு இதுவே காரணம்.

இந்த ஆழ்ந்த பக்தி ஆண்டவர் இயேசு அவருக்கு அருளிச்செய்த ஒரு மாபெரும் வரம் என்றே கூறவேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஹைடு ஆண்டவர் முன்னிலையில் தன்னை அதிகமதிகமாகத் தாழ்த்தினார். அதனால் அவருடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் அன்பும் கிருபையும் ஊற்றப்பட சாத்தியமாய் இருந்தது. நாம் இரட்சகர் இயேசுவுக்கென்று நம்மையே தத்தம் செய்யும்படி நம் உள்ளங்களில் அவர் கிரியை செய்வாராக. அப்படி நடக்கும்போது நம் ஜெபங்கள் உண்மையாகவே வல்லமை பெற்று, முதலாவதாக அவை நம் ஜீவியத்திலேயே செயலாற்றும் என்பது நிச்சயம். உலகத்தாரும் நம்மில் கிறிஸ்துவின் சாயலைக் காண்பார்கள்.

2. ஜான் ஹைடு மக்களை மிகப்பரிவுடன் நேசித்தார். குறிப்பாக எந்த மக்கள் மத்தியில் அவர் ஊழியம் செய்தாரோ அவர்களை அவர்தம் உயிருக்குயிராக நேசித்தது மட்டுமல்லாமல், அவர்களுக்காக அவர் இவ்வுலகில் தனக்குடையதான அனைத்தையும் தியாகம்செய்தார். தனக்கு இடையூறுகள் விளைவித்தவர்களையோ, தன் அன்பை அலட்சியப்படுத்தினவர்களையோ, அவருடைய அன்பையும், சாந்தத்தையும் தங்களுக்கு அனுகூலமாகக் கொண்டு அவருடைய பொருட்களை எடுத்துக் கொண்டவர்களையும்கூட, அவர் கடிந்துகொண்டதோ அவர்கள் மீது வெறுப்புணர்வு காட்டியதோ கிடையாது. பிறருடைய சரீர ஆன்மீக நல்வாழ்வுக்காகவும், அவர்களுடைய இரட்சிப்புக்காகவும் அக்கறையும் கரிசனையும் கொண்டவராக அவர்களுக்காக அனுதினமும் ஆண்டவருடைய சமுகத்தில் பரிந்துபேசி, ஜெபிப்பவராக ஜான் ஹைடு காணப்பட்டார்.

கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்ற திருவசனத்தின்படி அவர் கிறிஸ்துவின் அன்பில் பூரணப்பட்டவராயிருந்தார். ஆகையால் மக்களுடைய குறைபாடுகளையும், அன்பற்ற தன்மையையும், மனப்பக்குவமின்மையையும் அவர் பொருட்படுத்தாமல் அவர்களுடன் அன்பு, பரிவு, பச்சாத்தாபம், தயாள சிந்தையுடன் பழகி, உதவியும் எப்படியாகிலும் அவர்கள் மெய்த்தேவனாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து அவரின் மீட்பையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன் செயலாற்றுபவராக அவர் இருந்தார். எனவே இரட்சகர் தம் திருப்பணிக்காக எடுத்து உபயோகிக்கக் கூடிய இசைந்த பாத்திரமாக ஜான் ஹைடு வாழ்ந்தார்.

3. ஜான் ஹைடு தன்னுடைய மிஷனெரிகள்கள்மீதும் மற்ற உடன்பணியாளர்கள்மீதும் மிகுந்த அன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார். ஆனால் எப்பொழுதும் அவர் ஆண்டவர் காட்டும் பாதையிலே நடப்பதையும், அவரை மாத்திரமே மகிழ்வித்து, மகிமைப்படுத்துவதையும் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். ஆகையால் மனிதரின் அபிப்பிராயங்களும், விருப்பங்களும் இக்குறிக்கோளுக்கு முரணாகக் காணப்பட்டால், அவர் மனிதரைப் பொருட்படுத்தாமல் தம் பரம எஜமான் இயேசு இரட்சகருக்கே உண்மையாய்ச் சேவை செய்வதில் மன உறுதியாகவும், உற்சாகமாகவும் இருந்தார். அவருடன் பஞ்சாப் மிஷனில் பணியாற்றிய சில உறுப்பினர்கள் அநேக ஆண்டுகளாகத் தாங்கள் அவரைச் சரிவரப்புரிந்துகொள்ள முடியவில்லையே என்று நினைத்தனர். ஆனால், அவர்கள் அவரைச் சரியாக அறிந்துகொண்டபின் அவருடைய கபடற்ற தன்மையையும், உயர்ந்த பண்பையும், அவரில் காணப்பட்ட தூய ஆவியானவரின் வல்லமையையும் கண்டுணர்ந்து, அவரைப் பற்றி தாங்கள் கொண்டிருந்த அதிருப்தியினின்றும் விடுபட்டனர்.

சில சமயங்களில் மிஷன் ஊழியர்கள் சிலர் அவரிடமும், அவரைப்பற்றியும் அவதூறுகள் பேசியது உண்டு. ஆனால் அவரோ ஒரு மிஷனெரியிடமாவது, ஒரு மிஷனெரியைப் பற்றியாவது ஒருபோதும் ஓர் அன்பற்ற தாழ்ச்சியான வார்த்தைகூட பேசியதில்லை. அவர் தன்னுடைய நெருங்கிய அன்புக்கும் பாசத்துக்கும் உரியவரும், அப்போது பஞ்சாப் மிஷனில் பணியாற்றிக்கொண்டிருந்தவருமான பெங்கொன் ஜோன்ஸிடம் இரண்டொரு

தடவைகள், "நம் மிஷனிலுள்ள மிஷனெரிமார்கள் சிலர் இன்னும் என்னைச் சரிவரப் புரிந்துகொள் ளாமல் இருக்கிறார்கள்" என்று வெளிப்படையாகச் சொன்னதாக நாம் அறிகிறோம். அநேகர் அவரை ஒரு "சிடுமூஞ்சி" என்றும், முகக்களையற்றவர் என் றும், சோகமான தோற்றமுடைய மனிதர் என்றும் கருதினார்கள். ஆனால் சில சமயங்களில் அவர் அவ்வாறு தோன்றினாலும் உண்மையில் உள்ளத் தில் அன்பும், இனிமையும் நிறைந்த ஓர் உத்தம தேவ ஊழியனாக அவர் இருந்தார் என்று அவரைப் பற்றிய ஆதாரப்பூர்வமாக சாட்சிகள் உள்ளன. தன்னைச் சரிவர அறிந்து தன்னை நேசித்தவர்கள் மத்தியில் இருக்கும்போது அவர் முகமலர்ச்சியுட னும், பொலிவுடனும் காணப்பட்டார்.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

பாடம் 12

தொடர்ச்சி

(உன்னதப்பாட்டு 3:9-11)

9 ஆம்வசனம்

"சாலொமோன் ராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார்" (உன்.3:9).

சாலொமோன் ராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார். அவர் இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கி றார். இரதம் என்பது ஓரிடத்தில் அவ்விதமாகவே நின்றுகொண்டிருப்பது அன்று. அது இயங்கும் படியாய் உருவாக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து வோடு இசைந்து, இணைந்து இடைபடும் அநு பவங்களைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது.

பொதுவாக, இரதம் என்பது ஒருவருடைய கனம், மகிமை, மாட்சிமை, அதிகாரம் இவைகளை விளக்குகின்றதொன்றாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதரை மேன்மைப்படுத்த இரதம் உபயோகிக்கப்பட்டது. யோசேப்பு பார்வோனது சொப்பனத்தின் விளக்கத்தைத் தெளிவாகக் கூறின படியால், அவனை இராஜாவின் இரதத்தில் அமர்த்தி, பார்வோன் மேன்மைப்படுத்தினான். மேற் கூறப்பட்ட வசனத்தில் சாலொமோன் இரதத்தில் வருகிறதைக் காண்கிறோம்.

"என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும் படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினி மித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபி.2:9).

இயேசு கிறிஸ்து மரணத்தை உத்தரித்து வென்ற தினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டது, அவரது மகிமையின் இரதத் துக்கு ஒப்பானது.

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத் தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தை யும் மகிமையையும் பெற்றபோது" (2 பேதுரு 1:17), என்று வேதம் கூறுகிறது.

பிதாவாகிய தேவனால் இயேசு கிறிஸ்து கனத் தையும் மகிமையையும் பெற்றது, இரதத்தில் அமர்ந்திருக்குமாப்போலுள்ள அவரது உயிர்த் தெழுதலின் மேன்மையைக் குறிப்பிடுவதாகும்.

"சாலொமோன் ராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார்" என் றுள்ள வசனம் வேறொரு வேதாகம மொழிபெயர்ப் பில், *"சாலொமோன் ராஜா லீபனோனிலுள்ள கேதுரு மரத்தினால் இரதத்தைப்பண்ணுவித்தார்"* என்று காணப்படுகிறது. பொதுவாக, 'மரம்' என்ற சொல் மனிதனது சுபாவத்தைச் சுட்டிக்காட்டு வதாகும். 'கேதுரு மரம்' என்ற சிறப்புச் சொல், இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அவருக்குள்ளிருந்த மனிதத்தன்மையின் உன்னத சுபாவத்தை விளக்குகின்றது.

மரம், உயர்ந்து வளர்ந்து காணப்படும் ஒன்று. அதுபோன்று இயேசு கிறிஸ்துவும் இவ்வுலகில் அவதரித்த எல்லா அவதாரங்களையும்விட கனை

திரையற்ற உன்னதமானதோர் வாழ்க்கையை நடத்தினார். இவ்வித உயர்ந்த, களிசிக்க, வாழ்க்கையில் தம் சபையோடு ஐக்கியங்கொண்டு, அமர்ந்திருக்கும்படியாகவே இயேசு கிறிஸ்து விரும்பினார்.

இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்ற அனைத்து விசுவாசிகளும் மணவாட்டியாக விளங்கமுடியாது. விசுவாசிகளின் கூட்டத்திலும் இயேசு கிறிஸ்துவோடு இசைந்து வாழ்பவர்கள்தான் மணவாட்டியின் ஸ்தானத்தில், அவருடைய இரதத்தில் அமர்ந்து செல்லமுடியும். இயேசு கிறிஸ்துவோடு அமரும் சிலாக்கியம் பெற்ற விசுவாசிகள் பாக்கியவான்கள், பாக்கியவதிகள் ஆவர்.

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ.3:4).

கிறிஸ்துவோடுகூட நம்முடைய ஜீவன் மகிமையில் வெளிப்படும் சிலாக்கியம் நமக்கு அவசியம். *"நாம் மகிமைப்படும்படிக்கு அவரோடேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்"* (ரோமர் 8:17). கிறிஸ்துவின் மகிமை, கனம் நமக்கு வேண்டுமானால், நாமும் அவருடனேகூடப் பாடுபடவேண்டும். உபத்திரவங்கள், கஷ்டங்கள் மத்தியில் கடந்து செல்லமுடியாத விசுவாசிகள், கிறிஸ்து இயேசுவின் மகிமை, மாட்சிமை, கனம் அனைத்தையும் பெறமுடியாது. வேறு சில வேதாகம மொழிபெயர்ப்புகள், '*இரதம்*' என்ற சொல்லை, '*சிங்காசனம்*' என்று கூறுகிறது.

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளி. 3:21).

ஆம், நம்மைச் சுற்றிலும் இருக்கும் பாவ சோதனைகளின்மேல் ஜெயங்கொண்டு, அவரோடுகூட இவ்வுலகின் பாடுகளையும் பொறுமையோடே சகித்து, வெற்றி பெறுவோமானால் மட்டுமே, இயேசு கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் அமரும் சிலாக்கியமும், பாக்கியமும் நமக்குக் கிடைக்கும்.

சுருங்கக்கூறின், இவ்வுலகில் கிறிஸ்து இயேசு இரதத்தைப்போல அசைந்து செல்லுகிறார். அவருடைய அன்பிற்குரிய விசுவாசிகளோடு ஐக்கியங் கொண்டிருக்கிறார். தம்முடைய மகிமையையும், மகத்துவத்தையும், மாட்சிமையையும் வெளிப்படுத்திக்காட்டுகிறார். பாவ சிற்றின்பங்களை மேற்கொண்டு, பாடுகளைப் பொறுமையோடு சகித்து, ஜெயங் கொள்ளும் வாழ்க்கை வாழ்பவர்கள் அவரது இரதத்தில் அவரோடுகூட பயணம்செய்யும் சிலாக்கியத்தைப் பெற்று அநுபவிப்பர்.

10 ஆம் வசனம்

"அதின் தூண்களை வெள்ளியினாலும், அதின் தட்டைப் பொன்னினாலும், அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்; அதின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருந்தது" (உன்.3:10).

மணவாளனும் மணவாட்டியும் ஒருங்கிணைந்து அமர்ந்து வரும் இரதத்தின் தூண்கள் வெள்ளியினால் அமைக்கப்பட்டிருந்தன. '*வெள்ளி*' என்பது ஆத்தும மீட்பைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலர் தங்களது ஆத்தும மீட்புக்காக அரைச்சேக்கல் வெள்ளியைப் பரிசுத்த ஸ்தலத்தில் செலுத்தவேண்டியிருந்தது. இதனைக் கீழ்க்காணும் வசனங்கள் தெளிவிக்கின்றன.

"இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது, ... எண்ணப்படும் சமயத்தில் தன் தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்.

... பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச்சேக்கல் கொடுக்கவேண்டும்; ..." (யாத். 30:12,13).

"மீட்கவேண்டியவைகள் ... பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்கவேண்டும்" (எண். 18:16).

புதிய ஏற்பாட்டில் வாழும் நாமோ வெள்ளியினால் அல்ல; மாசற்ற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம். கீழ்க்காணும் வசனங்களால் இதனை நன்கு அறியலாம்.

"... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,

... கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேதுரு 1:18,19).

"பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (கிறிஸ்து) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபி.10:14). ஆம், இயேசுவோடு செல்லும் விசுவாசிகள் அவரது இரட்சிப்பின் கிருபையைப் பெற்றுப் பூரணமாக்கப்படுகின்றனர்.

இரதத்தில் காணும் தூண்கள் பெலத்தையும் உறுதியையும் வெளிப்படுத்திக்காட்டுகின்றன. *"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்"* (வெளி.3:12) என்று வேதம் கூறுகின்றது. *"... தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும்"* (பேதுருவும்) என்று கலாத்தியர் 2:9 இல் காண்கிறோம். ஆம், இயேசு கிறிஸ்துவோடு இணைந்து காணப்படும்போது, தூண்களைப் போன்றதொரு பெலனும், உறுதியும் நமக்குக் கிட்டும். தேவ வல்லமையால் நாம் காக்கப்படுவோம்.

விசுவாசிகள் தங்கள் சுயநீதியிலே பெருமை பாராட்டக்கூடாது. பாவத்திலிருந்து மீட்டெடுத்த இயேசுவின் கிருபையை எப்போதும் சார்ந்து வாழ வேண்டும். அப்போது அவர்கள் எவ்விதத் தடுமாற்றமுமின்றி, நிலைத்து, உறுதியோடு காணப்படுவார்கள்.

இரதத்தின் தட்டு பொன்னால் செய்யப்பட்டது. இரதத்தின் அஸ்திபாரமே அந்தத் தட்டில் தான் காணப்பட்டது. *'பொன்'* தேவனது மகிமையை வெளிப்படுத்திக்காட்டுவதாகும். ஆசரிப்புக் கூடாரத்தில் பொன் தேவ மகிமைக்கு அடையாளமாய்க் காணப்பட்டது. அதாவது, இது தேவனது தெய்வீக சுபாவத்தைச் சுட்டிக்காட்டுவதாகும். விசுவாசிகள் கிறிஸ்துவின் திவ்விய சுபாவங்களை வெளிப்படுத்திக் காட்டுபவர்களாக வாழ்தல்வேண்டும்.

பொன் திடமுள்ளது. இரதத்தின் பளுவைத் தாங்கவல்லது. எந்தச் சூழ்நிலைகளிலும் விசுவாசிகள் விழுந்துவிடாது, உறுதியாக அவரது அஸ்திபாரத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்பதை இது விளக்குகிறது. அதற்காகத் தேவன் இடைவிடாது விசுவாசிகளுக்குள் கிரியைசெய்து வருகிறார்.

உலகில் அவதரித்த அவதாரங்கள் அனைத்தும் தங்கள் மகிமையின் சுபாவங்களை வெளிப்படுத்தவில்லை. அவர்களது வாழ்க்கை எடுத்துக்காட்டாய் அமையவுமில்லை. அதனால்தான் அந்த அவதாரங்களின் உபதேசங்கள், கோட்பாடுகள் உலகோர் ஏற்றுக்கொள்ளமுடியாதவைகளாக அமைந்துள்ளன.

இயேசுவின் மகிமைபொருந்திய சுவிசேஷமோ, மக்களை ஈர்க்கும் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. எவ்வாறு? பொன்னுக்கொப்பான அவரது தெய்வீக சுபாவங்களால்மட்டுமே. பொன் தட்டில் கிறிஸ்துவோடு விசுவாசிகள் அமர்ந்துள்ளதால், அவர்கள் தைரியமாய்க் கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்ற முடியும். இரதத்தில் அமர்ந்து செல்லும் விசுவாசிகளுக்கு, காண்டாமிருகத்துக் கொப்பான பெலன் உண்டு (எண்.23:22).

பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய பெலவீனம் நீங்க ஜெபித்தபோது, இயேசு கிறிஸ்து என்ன கூறினார்? *"பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்"* (2 கொரி.12:9) என்றார். ***"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு"*** (பிலி.4:13) என்று பவுல் அப்போஸ்தலனைப் போன்று, விசுவாசிகளும் தைரியமாய் அறைகூவமுடியும்.

"அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்" (உன்.3:10).

பொன்னால் அமைந்த இரதத்தின் இருக்கை இரத்தாம்பரத்தினால் மூடப்பட்டிருந்தது. *'இரத்தாம்பரம்'* என்பது அரசனுடைய அதிகாரத்துக்கு ஒப்பனையாகும். மொர்தெகாயை மேன்மைப்படுத்தின இராஜாவான ஆகாஸ்வேரு, அவனை இரத்தாம்பரம் தரித்தவனாக நகர்வலம் வரச் செய்தான் (எஸ்தர் 8:15). ஐசுவரியமுள்ள மனுஷன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்தவனாய் வாழ்ந்தான் என்று, லூக்கா 16:19 இல் வாசிக்கிறோம். இரத்தாம்பரம் இயேசுவின் இராஜரீகத்தையும் ஆளுகையையும் சுட்டிக்காட்டுகின்றது.

"அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்" (1 தீமோ.6:15) என்றுள்ள வசனம், இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தைத் தெள்ளென விளக்குகின்றது. ஆம், இப்பூவுலகை அவர் ஆளுகை செய்கிறவர். விசுவாசிகள் இந்நாட்களில் உதாசீனமான நிலையில் காணப்படலாம். ஏழைகளாகவும் அவமதிக்கப்படத்தக்கவர்களாயும் காணப்படலாம். ஆனால், ஒருநாளில் இரத்தாம்பரத்தால் மூடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து, அவரோடு இணைந்து, இப்பூவுலகை அரசாளுவர் என்பதை எண்ணி, பூரிப்படைவார்களாக.

"அதின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருந்தது" (உன்.3:10).

'எருசலேம் குமாரத்திகள்' என்பவர் ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியைப்பெறாத குறைந்த அநுபவத்தில் வாழ்பவர்கள் என்பதை முன்னரே கண்டிருக்கிறோம். மணவாட்டியின் அழைப்புக்குரிய தரிசனம் அவர்களுக்கில்லை. அவர்களை அந்த ஸ்தானத்தில் ஈர்ப்பதற்கு நேசம் என்னும் சமுக்காளம் தேவை. அதாவது, அவர்களது குறைகளை, 'அன்பு' என்னும் போர்வையால் மூடி, அறிவுறுத்தி, நிலைநிறுத்தவேண்டும் என்பதாம்.

அன்பு மாத்திரமே கிறிஸ்தவ வாழ்க்கையின் உன்னத நிலைக்கு வழிநடத்தும். *"ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்"* (1 தெச. 5:14) என்றுள்ள வேதவசனங்களுக்கிணங்க, எருசலேம் குமாரத்திகளை அன்பென்னும் சமுக்காளத்தில் அமர்த்தி, அவர்களுக்குப் பரிவுகாட்டி அரவணைத்து, ஆற்றித்தேற்றி, கிறிஸ்துவினிடத்தில் சேர்த்து அமரச்செய்வது, சபைவிசுவாசிகளின் பொறுப்பு ஆகும்.

முதிர்ந்த அநுபவமுடையவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி குன்றினவர்களைக் குறைகூறக் கூடாது; நியாயந்தீர்க்கக்கூடாது. அவர்கள் பூரணமடைய, வெற்றி வாழ்க்கை நடத்த, நித்திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள, இயேசுவின்மேலுள்ள அன்புமாத்திரமே அநுகூலமாயிருக்கும்.

நேசமென்னும் சமுக்காளத்தில் அமர்ந்துள்ள அநுபவத்தில் முதிர்ந்த விசுவாசிகளே! அன்பினால் மற்ற அனைவரையும் ஈர்த்துக் கொள்ளுவீர்களாக.

11 ஆம் வசனம்

"சீயோன் குமாரத்திகளே! நீங்கள் புறப்பட்டுப் போய், ராஜாவாகிய சாலொமோனின் கலியாண நாளிலும், மனமகிழ்ச்சியின் நாளிலும், அவருடைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடிருக்கிற அவரைப் பாருங்கள்" (உன்.3:11).

இவ்வசனத்தில் *கலியாண நாள்* என்றும், *மனமகிழ்ச்சியின் நாள்* என்றும் கூறப்பட்டிருப்பதைக் காண்க. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்துத் தம்மைத் தியாகம் செய்தது, தமக்கேற்ற கறைதிரையற்ற மணவாட்டியைத் தெரிந்தெடுக்கவே.

"தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:26,27).

தமக்கேற்ற மணவாட்டியைத் தேடும்படியாக இம்மண்ணுலகில் நேச மணவாளனாம் இயேசு அவதரித்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி, சபையைப் பிரித்தெடுத்துக் கொண்டார். மேலும், தமது பிரித்தெடுத்தலுக்கு அடையாளமாகத் தமது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் முத்திரையாகத் தந்துள்ளார்.

எதற்காக இவ்விதம் சபையைத் பிரித்தெடுத்தார்? தமக்கு முன்பாகக் கற்புள்ள கன்னிகையாய்ச் சபையை நிறுத்தவே. இப்போது, அவரது கலியாண நாளுக்காகச் சபை நிச்சயிக்கப்பட்டுத்தான் உள்ளது. இன்னும் கலியாண நாள் வரவில்லை. இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும் போது—சபையானது எடுத்துக்கொள்ளப்படும் போது—கலியாண நாளின் முழுமையான சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும். சபையின் பூரண நிலை அப்போதுதான் உண்டாகும்.

"குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" (நீதி.12:4).

சபை குணசாலியான ஸ்திரீக்கு ஒப்பனை. கிறிஸ்து இயேசுவின் கலியாண நாளில் சபை அவருக்கு ஒரு கிரீடம்போல் அமையும்.

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12:2).

ஆம், *"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு"* அவமானத்தை எண்ணவில்லை. அவர் பெற்றுக்கொள்ளும் சந்தோஷம் என்ன? சபையைத் தம்மோடு அமர்ந்திருக்கச் செய்வதால் உண்டாகும் சந்தோஷமேயாகும். சபையாராகிய நாம் அனைவரும் அந்நாளுக்காகக் காத்து நிற்கிறோம். நிச்சயமாக அவருக்கு ஒரு கிரீடமாக அமைவோம்; அவருக்குள் மகிழுவோம்.

"சீயோன் குமாரத்திகளே!" (உன்.3:11).

சீயோன் குமாரத்திகளும் எருசலேமின் குமாரத்திகளுக்கு ஒப்பானவரே. இவர்களுக்குள் யாதொரு வேறுபாடும் இல்லை. இவர்களும் ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைந்த அநுபவமுடையவர்கள்தான். ஏசாயா 3:16,17 வாசிக்கவும்.

"அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது,

சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்" (ஏசாயா 4:3,4).

சீயோன் குமாரத்திகளும், எருசலேம் குமாரத்திகளும் ஒரே தரத்தில் காணப்படுகிறவர்கள்தான் என்பதை மேற்காணும்வசனங்கள் நிரூபிக்கின்றன.

"அவருடைய தாயார்" (உன்.3:11).

'தாயார்' என்ற சொல்லிற்கு இரண்டு, மூன்று விளக்கவுரைகளை வேத விற்பன்னர்கள் கூறியுள்ளனர். *'தாயார்'* என்பது கிருபையின் வாயிலாக வரக்கூடிய காரியங்களுக்கு ஒப்பாகிறது. இது முதலாவது விளக்கம். ஆயின், இவ்வசனத்தில் கிருபையின் வழியாய் வரக்கூடியவைகளை நாம் காணமுடிகிறதில்லை.

அடுத்து, தேவன் இயேசு கிறிஸ்துவுக்குப் பிதாவாய் அமைந்துள்ளார். மனுக்குலம் முழுவதற்கும் ஒப்பாகக் காணப்படுவது *'தாயார்'* என்ற சொல் ஆகும். இம்மனுக்குலத்திலிருந்து மனுஷீகமான ஒரு தாயார் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அது இயேசு கிறிஸ்துவிற்குத் தாயாக அமைந்த மரியாள் ஆவாள். அவள் மனுக்குலம் முழுவதற்கும் ஒப்பாகக் காணப்படுகிறாள். இயேசு கிறிஸ்துவின் சரீரம் அவள்மூலமாக ஆயத்தம்பண்ணப்பட்டது. அந்தச் சரீரம் மணவாட்டியாகிய சபைக்கு ஒப்பாகிறது. இந்தச் சபை மணவாளனைத் திருப்தியாக்கும்.

மூன்றாவதாக, *'தாயார்'* என்ற சொல்லைத் தெய்வீக பிரதிநிதி என்கின்றனர் சிலர். இது ஒரு பிரதான ஆசாரியனைக் குறிக்கும். இராஜாக்களை முடிசூட்டுவது பிரதான ஆசாரியர்களே. ஆகவே, ஆவிக்குரிய முறையிலே, *'தாயார்'* என்ற சொல்

தெய்வீக பிரதிநிதியாய்ச் செயல்படக்கூடிய ஒருவரைக் காட்டுகின்றது. இவ்வாறுள்ள பல்வேறு விளக்கங்களைக் கண்டறிவதும் தவறில்லை.

இதன் விளக்கத்தைக் கண்டறிவதில் நாம் நமது மூளை அறிவையும் பயன்படுத்தவேண்டும். இரண்டாவது விளக்கம் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. மனுக்குலம் முழுமைக்கும் பிரதிநிதியாக, *'தாயார்'* ஒப்பாகிறாள். மனுக்குலத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட தாயார், மணவாளனான இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை உருவாக்குவதற்குக் காரணமானவள். இச்சரீரம் ஆண்டவராகிய மணவாட்டி சபையைக் குறிக்கின்றது. இதனைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினம் தான்.

இப்போது சபையானது மணவாளனுக்காய் நியமிக்கப்பட்டிருக்கிற ஒரு மணவாட்டியாய்க் காணப்படுகின்றது. கலியாண நாள் ஒன்று சீக்கிரமாய் வரப்போகிறது. அந்நாளிலே சபை மகிழ்ச்சியாய் இருக்கும்.

இயேசு கிறிஸ்து தம்மோடு தம் சபையை அமர்ந்திருக்கப்பண்ண, தமது இரத்தத்தைச் சிந்தி மீட்டெடுத்தார். அவரோடு அமர்ந்திருக்கும்போது, சபைக்குப் பெலனும், உறுதியும், பாதுகாப்பும் உண்டு. சபை விசுவாசிகள் திவ்விய சுபாவங்களைத் தரித்து மகிமை பொருந்தியவளாய்க் காணப்படுதல்வேண்டும். தமது இராஜரீக மகிமையினால் ஆயத்தமாக்கப்பட்ட சபையோடு இணைந்து மனுக்குலத்தை ஆளப்போகிறார் இயேசு கிறிஸ்து.

முதிர்ந்த அநுபவம் பெற்ற விசுவாசிகள் தேர்ச்சி குறைந்த விசுவாசிகளைத் தங்களது அன்பென்னும் சமுக்காளத்தில் அமர்த்தி, அவர்களை ஆற்றித் தேற்றி, திடப்படுத்தி, சீர்ப்படுத்திப் பெலப்படுத்தி, மணவாட்டியின் பூரண நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும். ஆட்டுக்குட்டியானவரின் மனமகிழ்ச்சியின் நாளாம் கலியாண நாளுக்கு அவரது சரீரமாகிய சபை தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். கர்த்தர் தாமே அதற்கேற்ற கிருபைகளைத் தந்தருளுவாராக.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஒரு கைதி என்றாலும்

காரி டென் பூம் அம்மையார்

தொடர்ச்சி

6. ரேவன்ஸ்ப்ரக் என்னும் பயங்கரச் சிறைதனிலே

பஞ்சம்! மாபெரும் பஞ்சம்!! ஜெர்மன் நாடெங்கும் பஞ்சம். ஜெர்மன் நாட்டிலுள்ள மக்களுக்கே பஞ்சம் என்றால், அந்நாட்டின் கண்ணுள்ள சிறைவாசிகளுக்குப் பஞ்சத்தின் கொடுமை எவ்வளவு பயங்கரமானதாக இருந்திருக்கும்! உணவுக்குப் பஞ்சம்! உடைக்குப் பஞ்சம்! உறைவிடத்திற்குப் பஞ்சம்! நல்ல நல்ல பொருட்களுக்கெல்லாம் சொல்லமுடியா பஞ்சம். இந்த அகோர யுத்த நெருக்கடியில் சிறைவாசிகளுக்கு என்ன உணவு கிடைக்கப்போகிறது? என்ன உறைவிடம் அளிக்கப்படப் போகிறது? என்ன ஆடை தரப்படப்போகிறது? ஆடையா கொடுத்தார்கள்? அரை நிர்வாணம்தான்! உணவா கொடுத்தார்கள்? முக்கால் பட்டினிதான்! உறைவிடமா கொடுத்தார்கள்? உறங்குவதற்குக் கூட இடம் கிடையாது. ஒதுங்குவதற்குக்கூட மறைவிடம் கிடையாது. தங்குவதற்கு ஆரம்பத்தில் ஒரு கூரைகூட கிடையாது.

ஆம், கூரையற்ற திறந்தவெளிப் பாசறையில் தான் சில நாட்கள் நாங்கள் தங்குவதற்கு நேரிட்டது. மேலே வானம்! கூரையில்லை. கீழே பூமி! படுக்கையில்லை. பக்கத்தில் மின்சாரக் கம்பி! சுவர் கூட இல்லை. மழையால் நனைந்தால் மாற்றிக் கொள்வதற்கு மாற்றுவுடையும் கொடுக்கப்படவில்லை. நாங்கள் முன்னர் உகட் சிறையிலிருந்து வருங்கால் உடுத்தியிருந்த ஆடையையும் பிடுங்கிக்கொண்டார்கள். மேலாடைக்கே பஞ்சம் என்றால் உள்ளாடைக்கு வழியேது? உள்ளாடை போட்டுக்கொள்வதும் பெரும் குற்றமாகக் கருதப்பட்டது. அதற்கு எத்தனையோ சோதனை! இவ்வளவு பயங்கர ஆட்சிக்குள்ளும் ஆண்டவர் அருளால் ஒரு சிறிய வேதாகமத்தையும், உள்ளாடையையும் நான்

இரகசியமாக மறைத்து, ஒளித்து வைத்துக்கொண்டேன். மற்றக் கைதிகளை எல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து பெருஞ்சோதனை போட்டவர்கள், எப்படியோ என்னை மட்டும்விட்டுவிட்டார்கள்.

என் வேதபுத்தகம் அவர்களுடைய கண்களுக்குத் தென்படாமல் என் உள்ளாடைக்குள் என்னோடு ஒட்டி உறைந்து, மறைந்து கொண்டது. ஆ! அந்த ஒப்பற்ற பரிசுத்த பரம செல்வத்தை விட்டுப் பிரிந்து என்னால் எப்படி உயிர்வாழ முடியும்? பசி, பட்டினி, தாகம், நாவறட்சி, நிர்வாணம், அடி, உதை, ஏச்சு, பேச்சு, சாபம், கோபம், வியாதி, துன்பம் எல்லாவற்றையும் ஒருவாறு சகித்துக்கொள்ளப் பழகினேன். அப்பொறுமையைக் கற்றுக் கொடுத்தது, நான் என்னோடு இரகசியமாக ஒளித்து வைத்து வாசித்த கர்த்தருடைய வசனமேயாகும். வேதாகமத்தின்மூலமாக கர்த்தர் என்னோடு பேசினார். நான் அவரோடு பேசினேன். ஆகையால் நெருப்பையும் கடந்துசெல்ல அனுக்கிரகம் பெற்றேன்.

சில நாட்களுக்குப் பின்னர் நாங்கள் வசிப்பதற்கு ஓர் அலங்கோலமான கூடாரம் கொடுக்கப்பட்டது. தரையில் வைக்கோல் புழுதியும், பேன் பூச்சிகளும் மலிந்து கிடந்தன. ஆகவே எங்கள் தலைமுடியெல்லாம் ஒட்டக் கத்தரிக்கப்பட்டன. எனினும் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரே அழுக்கு ஆடையில் பேன்களும், பிற பூச்சிகளும் ஆட்சிசெய்வதைத் தடுத்து நிறுத்த எங்களால் முடியவில்லை.

இந்த நெருக்கடியுள் நாங்கள் ஐந்து அல்லது ஏழு பேர் சேர்ந்து இரு சிறிய படுக்கைக்குள் நெருக்கியடித்துக் கொண்டு படுத்துறங்க வேண்டும். இந்தப் பயங்கர நெருக்கடியில் என்னோடு படுத்திருந்த ஒரு கைதி இறந்தே போய்விட்டாள். இரவெல்லாம் அந்தப் பிணத்தோடுகூடத்தான் நான் படுத்துக் கிடக்க நேரிட்டது! வேறு என் செய்வது? வேறு என்னதான் செய்தாலும், உடனே எனக்குக் கிடைப்பது மரண தண்டனைதான். ஆகவே, நான் அந்த முழு பிணத்தோடு அரைப்பிணம்போல் இரவு முழுவதும் படுத்துக்கிடந்தேன். காவல் பெண்கள் அதிகாலையில் வந்து அந்தப் பிணத்தை அகற்றினார்கள். அந்த நிலை எனக்கு எந்த நாள் வருமோ யான் அறியேன் பராபரனே!

உணவுப் பஞ்சத்தால் அச்சிறையிலுள்ள கைதிகளெல்லாம் நடைபிணம்போல் காட்சியளித்தார்கள். எங்குப் பார்த்தாலும், எல்லாரும் எலும்பும் தோலுமாகவே தோற்றமளித்தார்கள். உயிரோடிருப்பதைவிட உயிர் துறப்பதே சாலச் சிறந்ததாகத் தென்பட்டது. உயிர் நீத்துவிடுவார்க்கு வருந்துவதைவிட, உயிரோடு இருப்போர்க்காகவே அதிகமாக வருந்தி, பரிதாபப்படவேண்டிய பயங்கரச் சூழ்நிலை நிலவியிருந்தது.

சில கைதிகள் பெத்சீயிடமும், என்னிடமும் வந்து ஓர் ஆலோசனை கேட்டார்கள்: நாங்கள் கொடூரமாய் நடத்தப்படுவதைக் குறித்து சிறையின் மேலதிகாரியிடம் புகார் செய்யலாமா என்பதே, அவர்கள் எங்களிடம் கேட்ட கேள்வி. பெத்சீ உடனே அவர்களை நோக்கி, "நாம் நம்முடைய நிர்ப்பந்தமான நிலையைக்குறித்து, இச்சிறைச்சாலையின் தலைவனுக்கு அறிவிப்பதைவிட, எல்லாம் வல்ல இறைவனிடம் நம்முடைய கவலைகளைத் தெரிவிப்பதே புத்தியுள்ள செயல்" என்று மிக மிக அழுத்தமாக எடுத்துரைத்தாள்.

சில நாட்கள் சென்ற பின்னர் பெத்சீ கூறிய ஆலோசனையின் அருமையை அறிந்துகொண்டோம். நாங்கள் அன்றுமாத்திரம் சிறையதிகாரிகளிடம் சென்று புகார் செய்திருப்பின், எங்கள் முன்னிலைமையிலும் பின்னிலைமை மிக மிகக் கொடுமையுள்ளதாய் இருந்திருக்கும். கடவுள்தான் எங்கள் உயிரைக் காத்தார். அவருக்கே எப்பொழுதும் கனமும், மகிமையும் உண்டாவதாக. அவர் தம்மை நம்பியிருப்பவர்களை ஒருக்காலும் கைவிடமாட்டார். அவர் ஒருநாளும் தவறு இழைக்கமாட்டார். தம்மை நம்பியிருப்பவர்களுக்கு உதவி செய்வதற்கு அவர் ஒருநாளும் தவறவும் மாட்டார்; தவறியதும் இல்லை! அவர் இனித் தவறப்போவதும் இல்லை!! அவர் கர்த்தர்!!!

இக்காரிருள் மத்தியிலும் ஓர் ஒளிக்கதிர் வீசச் செய்தார் கர்த்தர். சிறையில் மருத்துவமனையில் பணியாற்றிய ஒரு தாதி தனது உயிர் ஆபத்துக்கும் அஞ்சாமல் இரவு நேரத்தில் இரகசியமாக மறைந்து வந்து என்னிடம் வைட்டமின் மாத்திரைகள் நிறைந்துள்ள புட்டியொன்றைக் கொடுத்துவிட்டு, மீண்டும்

மாயமாய் மறைந்து சென்றுவிடுவாள். அந்தத் தாதியை நான் கடவுளனுப்பியுள்ள ஒரு தேவதூதனாகவே கருதி, பாராட்டினேன். கற்பாறையிலிருந்தும் தண்ணீர் வரச்செய்த கடவுள் இக்காலத்தில் செத்துப்போகவில்லை. எலியாவைக் காகங்களைக் கொண்டு போஷித்த கடவுள் இன்று மாண்டு மறைந்து போகவில்லை.

அவர் நேற்றும், இன்னும் என்றும் மாறாத அற்புத மூர்த்தியாகவே உயிரோடிருக்கிறார். நம்மை இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவும் இல்லை. நம்முடைய விண்ணப்பத்தைக் கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய காது மந்தமாகவுமில்லை. அவரை நம்பியிருக்கிறவர்களுக்கு அவர் இரங்காதபடிக்கு அவருடைய இருதயம் கருங்கல் பாறையாய்ப் போகவுமில்லை. அவர் மன்னிப்பதற்குத் தயை பெருத்தவர். அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். தம் பிள்ளைகளுக்கு உதவி செய்வதில் அவர் துடித்து நிற்பவர். தம் உயிர் கொடுத்து நம் உயிரைக் காப்பவர் அவர். இதோ விசுவாசிகளைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை. கர்த்தர் தம் மக்களைக் கண்மணியைப்போல் காப்பாற்றுகிறார்! எனக்குக் கிடைத்த வைட்டமின் மாத்திரைகளைப் பிற கைதிகளுக்கும் கொடுத்துதவினேன்.

(தொடரும்)

வாலிபர்  பகுதி

The cost of true discipleship

Wherever Jesus went, great multitude followed Him. Many leaders would be elated by throngs of people. But our Lord was looking for people who were willing to live devotedly and passionately for Him and even die if necessary. And so He began to sift the crowd by presenting to them vigorous terms of discipleship. At times the Lord Jesus wooed men to Himself but after they began to follow Him, He winnowed them.

First of all He told those who followed Him that in order to be true disciples, they must love Him supremely. At no time did He suggest that they must bitterly hate their father and mother, wife, children, brothers and sisters. He only emphasized that love for Chirst must be so great that all other loves are hatred by comparison. Matt.10:37 says, *"He that loveth father or mother more than me is not worthy of me: and he that loveth son or daughter more than me is not worthy of me."* No consideration of family ties must ever allow a disciple to deviate from a pathway of full obedience to the Lord.

We must bear in mind that not only must we love our relatives less: we must also hate our lives. Job says in Job 42:5,6, *"I have heard of thee by the hearing of the ear: but now mine eye seeth thee. Wherefore I abhor myself, and repent in dust and ashes."* Instead of living self-centred lives, we must live Christ-centred lives. In the light of the great task of glorifying Christ and making Him known, considerations of personal comfort and safety pale into insignificance.

Secondly He taught that a true disciple must bear His own cross and follow Him. The cross is not some mental anguish. It is positively an avenue of reproach, suffering, loneliness and even death which a person voluntarily chooses for Christ's sake. If we determine to be all out of Christ, we will experience the same kind of satanic opposition which the Son of God knew while he was on earth. This is the cross. The disciple who chooses to come after Christ should live a life of self-renunciation, humiliation, reproach and temptation.

The Lord uses brief illustrations to impress the dire necessity of counting the cost of discipleship before setting out to follow Him. He compared the matter of discipleship to a building project and then to warfare. Before starting to build a tower, a man sits down first and works out the estimate for

the building. He will not begin the project if he does not have enough money and materials. He will be sujected to ridicule and scorn by the people around him if he is unable to complete it. So it is with the disciples. They should first count the cost, whether they really mean to abandon their lives whole heartedly to Christ.

A king going to war against forces that are numerically superior, must consider carefully whether his smaller forces are able to defeat the enemy. He must choose between absolute commital or abject surrender. The same principle applies to the life of Christian discipleship.

Luke 14:33 says especially that, *"whosoever he be of you that forsaketh not all that he hath, he cannot be my disciple."* The words of Jesus do not say that a person must be willing to forsake all. Instead, they say that he **must** forsake all. Jesus realized that the job of forsaking all could never be done in any other way.

Ryle observes: "The man who does well for himself, is the man who gives up everything, for Christ's sake". He carries the cross for a few years in this world and in the world to come has everlasting life. He is rich in grace here and he is rich in glory hereafter. And best of all, "What he obtains by faith in Christ, he never loses." It is the good part which is never taken away.

The disciple has one reason for existence. If he fails to justity it he is, of all men most miserable. Concerning the salt, we read that men throw it out if it has lost the savour. God does not cast it out. That will never happen. But men throw it out which means that they trample underfoot the one who is useless like salt, when it has lost the one property for which it is valued. He is not suited for the world's purposes. Like the savourless salt he becomes an object of contempt and judgement. Jesus closed the message on discipleship with the words, "He who has ears to hear let him hear."

சிறுவர் பகுதி

உன்னைப்போல் பிறனையும் நேசி

"பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப் புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்" (லேவி.19:18).

இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே! இயேசுவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். அன்பு என்னும் நீரூற்று, தன்னலம் என்னும் பாறைகளில் தேங்கி, கொடுமை, கொள்ளை என்னும் முட்செடிகளை முளைத்தெழுப்பி, மானிட நற்பண்புகளைச் சீர்குலைத்துக்கொண்டிருக்கும் இப்பூவுலகில், பிறரிடம் அன்பு பாராட்டுவது ஒரு அரிதான செயலே. ஆயினும் கர்த்தர் கொடுத்த கட்டளையின்படி பிறரிடம் அன்பு பாராட்டுவது எப்படி? இக்கதையின்மூலம் தெரிந்துகொள்ளலாமா?

"அப்பா! தயவு செய்து பழைய ஏற்பாடு புத்தகம் வேண்டாம்; புதிய ஏற்பாட்டுப் புத்தகத்திலிருந்து வாசிக்கலாமே; லேவியராகமம் வாசிப்பதற்குக் கடினமாக இருக்கும்" என்று, குடும்ப ஜெபத்திற்காக அமர்ந்திருந்த வெஸ்லி தன் தந்தையிடம் முறையிட்டான்.

"அப்படியெல்லாம் கடினமாக இருக்காது; நீ லேவியராகமம் 19 ம் அதிகாரத்தின் 15 முதல் 22 வரையுள்ள வசனங்களை வாசி" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார், வெஸ்லியின் தந்தை.

ஒருவழியாக, லேவியராகமம் 19 ஆம் அதிகாரத்தின் 15 முதல் 22 வரையுள்ள வசனங்களை வாசித்து முடித்தான் வெஸ்லி. அவ்வதிகாரத்தின் 18 ஆம் வசனம் அவன் மனதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. படுக்கைக்குச் சென்ற வெஸ்லிக்குத் தூக்கம் வரவில்லை.

அவன் தாயிடம் ஓடிச்சென்று, "அம்மா! இன்று நான் வாசித்த வேதபகுதியில், 'பிறன்' என்பது யாரைக் குறிக்கிறது?" என்று கேட்டான்.

"அடடா! நீ இன்னும் தூங்கவில்லையா? 'பிறன்' என்றால், நம் அருகில் வசிப்பவர்கள்; நம்மோடு பழகுபவர்கள்; நமக்கு உதவி செய்கிறவர்கள் தான்" என்று அன்போடு கூறினார்கள், அவன் அம்மா.

சிறிது நேரம் அமைதியாய் இருந்த வெஸ்லி, "அம்மா! அப்படியானால் என் வகுப்பில் படிக்கும் மாணவர்களும் எனக்குப் பிறர்தானா?" என்று கேட்டான்.

"அதில் என்ன சந்தேகம் உனக்கு? அவர்களும் உனக்குப் பிறர்தான். சரி, சரி, நீ போய் சீக்கிரமாய்த் தூங்கு; நாளைக்குப் பேசலாம்" என்று அவனைத் தூங்கச்செய்தார்கள் அவன் தாயார்.

மறுநாள் சனிக்கிழமை ஆனதால், வெஸ்லி பொறுமையாக எழுந்து, குளித்து, காலை உணவைச் சாப்பிட்டு முடித்தான். அவன் வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கவே, அவனுடைய தாயார் போய்க் கதவைத் திறந்தார்கள். அங்கு, வெஸ்லியின் வகுப்பு மாணவனான வின்சென்ட் நின்றுகொண்டிருந்தான்.

"வெஸ்லி இருக்கிறானா?" என்று வினவிய அவனை உள்ளே அழைத்தார்கள் அவன் தாயார். "வெஸ்லி" என்று ஓரிருமுறை அவனை அழைத்தும் அவனிடமிருந்து பதிலேதும் வராததால், அவன் வெளியே சென்றுவிட்டதாக வின்சென்டிடம் கூறி, உள்ளே வந்தார்கள் அவன் தாயார். உள் அறையில் ஏதோ சத்தம் கேட்கவே, அறைக்குள்ளே வந்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்து நின்றார்கள். அங்கு, வெஸ்லி ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான்.

"வெஸ்லி! இது என்ன, புதுப்பழக்கம்? நான் கூப்பிடும்பொழுது நீ பதில் கொடுக்கவும் இல்லை, எழுந்து வரவுமில்லை. என்ன ஆயிற்று உனக்கு?" என்று கோபத்தோடு கேட்டார்கள் அவன் தாயார்.

அவனோ பொறுமையாக, "அம்மா! அந்த 'அறுவை' வின்சென்ட் போய்விட்டானோ? அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவனும் நம்முடைய அடுக்குமாடிக் கட்டடத்தில் தான் குடியிருக்கிறான். எங்கள் வகுப்பிற்குப் புதிதாக வந்துள்ளான். புதிய மாணவர்கள் எப்பொழுதும் அமைதியாக அல்லவா இருப்பார்கள்? ஆனால் இவனோ, ஒரு பெரிய, 'பந்தா!'. அவன் அப்பா கப்பலின் தலைவன் என்றும், அவன் அம்மா ஒரு அரசாங்க வக்கீல் என்றும் அலட்டிக்கொள்வான். இப்பொழுது என்னோடு பழகி, என் நண்பனாக வேண்டும் என்று பல யுக்திகளைக் கையாளுகிறான். எனக்கு அது பிடிக்கவில்லை. அதனால்தான் பேசாமல் அமர்ந்திருந்தேன்" என்று அமைதியாகக் கூறினான், ஆறாம் வகுப்பு மாணவனான வெஸ்லி.

"நீ இயேசு அப்பாவின் பிள்ளையல்லவா? 'உன்னில் அன்பாயிருக்கிறதுபோல் பிறனிலும் அன்பாயிருக்கவேண்டும்' என்று நேற்றுதானே வாசித்தாய்? இன்று ஏன் இப்படி நடந்துகொள்கிறாய்?" என்று கோபமாகச் சொல்லி, உள்ளே சென்றார்கள் அவனுடைய தாயார்.

மறுநாள் ஞாயிறு காலை ஆராதனையிலும், ஓய்வுநாள் பள்ளியிலும் அவன் மனதில், "*உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக*" என்ற வசனம் ஒலித்துக்கொண்டேயிருந்தது. ஆலயத்திலிருந்து தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு, மெள்ள வீட்டைநோக்கி வந்தான். அவன் குடியிருக்கும் அடுக்குமாடி கட்டடத்தின் அருகே வந்தபோது, வின்சென்ட் அவனுக்கு எதிராக மிக வேகமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்தான்.

"வெஸ்லி, என்னைப் பாரேன்! கைகளை விட்டுவிட்டு, சைக்கிளை எவ்வளவு வேகமாக ஓட்டுகிறேன்! ஏ... ஏ... ஏ..." என்று, உரத்த சத்தத்துடன் சத்தமிட்டுக்கொண்டே சென்றான்.

அவனை ஆச்சரியமாய்ப் பார்த்துகொண்டிருந்து கடந்து சென்ற வெஸ்லியின் செவிகளில் பயங்கர சத்தம் கேட்டது. அவன் சைக்கிளை நிறுத்திவிட்டுத் திரும்பிப்பார்த்தான். அங்கே

வின்சென்ட் கீழே விழுந்து கிடப்பது தெரிந்தது. “இது உனக்குத் தேவைதான்” என்று தன் உள்ளத்தில் சொல்லிக்கொண்டே, வெஸ்லி தன் வீட்டை நோக்கி சைக்கிளில் விரைய முற்பட்டான்.

ஆனாலோ, அவனால் அந்த இடத்தைவிட்டு அசையமுடியவில்லை. திரும்பத் திரும்ப, “*உன்னில் அன்பாயிருக்கிறதுபோல, பிறனிலும் அன்பாயிரு*” என்ற வார்த்தைகள் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. அதை அசட்டைபண்ண முடியாத வெஸ்லி, தன் சைக்கிளை விட்டுவிட்டு, வின்சென்டை நோக்கி ஓடினான்.

அங்கு, வின்சென்ட் விழுந்த அதிர்ச்சியில் மயங்கிக் கிடந்தான். அவன் கால்கள் சைக்கிளின் கம்பிக்குள் மாட்டியிருந்தன. அவன் இடது கை வீக்கங்கண்டிருந்தது; முகமெல்லாம் காயங்கள்; செய்வதறியாது திகைத்த வெஸ்லி, அருகில் நின்றவர்களிடம் தன் தந்தையை அழைத்து வருமாறு கூறினான். செய்தியறிந்த வெஸ்லியின் பெற்றோர் ஓடி வந்து, வின்சென்டைத் தூக்கி வீட்டிற்குக் கொண்டுவந்து, முதலுதவிகள் செய்து, அவன் பெற்றோருக்கும் தகவல் அனுப்பினார்கள்.

அவனது பெற்றோரிடம் நடந்ததெல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தான் வெஸ்லி. வின்சென்டைக் கண்டாலே வெறுப்புற்ற அவனை, கர்த்தருடைய வசனம் முற்றிலும் மாற்றியதை எண்ணி, தேவனுக்கு நன்றி செலுத்தினர் வெஸ்லியின் பெற்றோர். வின்சென்ட்டும் வெஸ்லியும் இணைபிரியா நண்பர்களாய் மாறினர்.

அன்பு பிள்ளைகளே! கதையை வாசித்துவிட்டீர்களா? ஒருவேளை நீங்களும்கூட காரணம் இல்லாமல் பிறரை வெறுக்கலாம்; அல்லது பகைக்கலாம். ஆனால் தேவனுடைய கட்டளையாகிய, “*உன்னில் நீ அன்புகூருவதுபோல், பிறனிலும் அன்புகூருவாயாக*” என்ற வசனத்திற்குக் கீழ்ப்படிவீர்களாயின், நிறைவான பலனைப் பெற்றுக்கொள்வீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சிப் பகுதி

எனது பெயர் வெண்மதி. எனது கணவர் பயங்கரக் குடிகாரர். அவர் குடிபோதைக்கு, 13 ஆண்டுகளாக அடிமையானவர். இதனால் எனக்கும் என் கணவருக்கும் தினந்தோறும் சண்டை நடக்கும். என்னை அடித்துத் துன்புறுத்துவார். நான் அவருக்காகக் கண்ணீரோடு விண்ணப்பம்பண்ணி வந்தேன். நமது சபையின் 24 மணி நேர சங்கிலி ஜெபத்தில் அவர் பெயரை எழுதிக்கொடுத்து, ஜெபித்து வந்தேன். அவருக்காக அநேகரும் ஜெபித்துவந்தனர். தேவன் கிருபையாய் மனமிரங்கி, என் கணவரைத் தொட்டார். கடந்த 8 மாதமாக அவர் குடியை நிறுத்திவிட்டார்.

எனது மகன் வெங்கடேஷ், 2 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான். திடீரென்று, ஒரு நாள் பள்ளியில் இரத்தவாந்தி எடுத்திருக்கிறான். நான் அவனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், சங்கிலித் தொடர் ஜெப அறைக்குள் கொண்டுவந்து ஜெபித்தேன். அன்றிலிருந்து, இந்த நாள் வரைக்கும் அவன் சுகமாக இருக்கிறான்.

தேவன் இவ்வாறு எங்கள் குடும்பத்தில் செய்த மகத்தான அற்புதங்களுக்காக அவரைத் துதிக்கிறேன். நாங்கள் குடும்பமாகக் கடந்த ஆண்டில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

D. வெண்மதி

எனது பெயர் ரம்யப்பிரியா. நான் பி.காம் படிப்பதற்காக ஒரு அரசினர் கல்லூரியில் விண்ணப்பித்திருந்தேன். அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டுமென 5 மணிநேரம் தேவனிடம் போராடி விண்ணப்பம் பண்ணினேன். ஆனால் counselling அன்று, என் பெயர் வரவில்லை. ஏதாவது அதிகாரியின் சிபாரிசு இருந்தால்தான் இடம் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

15.6.2008 அன்று, ஆராதனை நேரத்தில் மிகவும் பாரப்பட்டு ஜெபித்தேன். “கர்த்தாவே! நான் வேறு எந்தக் கல்லூரியிலும் விண்ணப்பம் பண்ண

வில்லையே; எனக்கு நீரே சிபாரிசு பண்ணும்" என்று ஜெபித்தேன். "இன்று, கண்ணீரோடு அழுபவர்களுக்குக் கர்த்தர் அடுத்த ஞாயிறுக்குள் ஜெயம் கிடைக்கச் செய்வார்" என்றுள்ள தீர்க்கதரிசனம் அன்று ஆராதனையின்போது கூறப்பட்டது. மட்டுமன்றி, "இயேசு கூட வருவார்; எல்லாவித அற்புதம் செய்வார்" என்ற பாடலின் மூலமாகவும் ஆண்டவர் என்னை ஆறுதல்படுத்தினார்.

நானும் எனது தாயாரும் அதே வாரத்தில் வேறொரு கல்லூரிக்குச் சென்று, எனது மேற்படிப்புக் குறித்து விசாரித்தோம். வைஷ்ணவா கல்லூரியில் பி.ஏ. படிக்க, ஆண்டு ஒன்றுக்கு 25,000 செலவாகும் என்று சொன்னார்கள். எனினும், நானும் எனது தாயும் ஜெபநிலையில் நம்பிக்கையோடு, அதே கல்லூரியில் முயற்சி செய்தோம். Sports quotaவின் வாயிலாக, இலவசமாக வைஷ்ணவா கல்லூரியில் சேர, கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். முந்தின ஞாயிறன்று, கூறின தீர்க்கதரிசன வார்த்தைகள் அவ்விதமே நிறைவேறிற்று. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ரம்யப்பிரியா

சபையின் செய்திகள்

1. ஒய்வுநாள் பள்ளியின் ஆண்டு விழா

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் ஒய்வுநாள் பள்ளியில், ஆரம்ப வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை, ஆயிரத்து முந்நூறு ஆண், பெண் சிறார்கள் கல்வி பயிலுகின்றனர். இவ்வாண்டு ஒய்வு நாள் பள்ளி 30 வாரங்கள் நடைபெற்றது.

ஆண், பெண் ஆசிரியர்களாக மொத்தம் 130 பேர், ஜெபத்தோடும், தியாகத்தோடும் இப்பள்ளியில் பணிபுரிந்து, பிள்ளைகளைத் தேவபக்திக்குள் வழி நடத்திவருகின்றனர். இவ்வகுப்புகள் ஆங்கில மொழி வாயிலாகவும், தமிழ்மொழி வாயிலாகவும், நடத்தப்பட்டுவருகின்றன. பிள்ளைகள் செமஸ்டர் முறையில் தேர்வு எழுதிவருகின்றனர்.

2009, டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள், இப்பள்ளியின் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்போது, தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. ஒய்வுநாள் பள்ளியில் தவறாமல் வருகைதந்த மாணவ, மாணவிகளுக்கான சிறப்புப் பரிசுகளும், மற்ற மாணவ மாணவிகளுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

ஒய்வுநாள் பள்ளியில் பயின்ற மாணவர்களில் பலர் ஆண்டு விழாவன்று, நடனத்தோடுகூடிய சிறப்புப்பாடல்களைப் பாடினர். அவை, ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் வெகுவாகக் கவர்ந்தன. அன்று, குறுநாடகங்களையும், சிறுநாடகங்களையுங்கூட சிறார்கள் நடித்துக்காட்டினர். இவை அனைத்தும் மாணவர்களுக்குமட்டுமன்றி, பெற்றோர்களுக்கும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தன.

கர்த்தர்தாமே அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் ஒய்வுநாள் பள்ளியை மேன்மேலும் சிறந்து விளங்கச்செய்வாராக.

2. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் கிளைச் சபை ஊழியர்களின் கூடுகை

2009, பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் கிளைச்சபை ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், சிதம்பரம் அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபைப் போதகர் தாமஸ் அவர்கள், எசேக்கியேல் 36:7 ஐ மையமாகக்கொண்டு, "நான் என் கரத்தை உயர்த்துவேன்" என்ற தலைப்பில் செய்தி அளித்தார்.

தேவனுடைய கரம் உயர்த்தப்படும்போது, அது அபிஷேகிக்கும் கரமாகக் காணப்படும் (ஏசாயா 61:1) என்றும், அரவணைக்கும் கரமாக விளங்கும் (ஏசாயா 43:1,4) என்றும், அது ஆசீர்வதிக்கும் கரமாகக் காணப்படும் (ஆதி.12:1) என்றும், அது அற்புதம் செய்யும் கரம் (நியா.6:14,15)

என்றும், அக்கினியிலும் அது காக்கும் கரமாக விளங்கும் (ஏசா.43:2) என்றும் விளக்கினார்.

தேவகரம் தங்கள்மேல் வல்லமையுடன் இறங்கவேண்டும் என்று, ஊழியர்கள் அர்ப் பணித்து ஜெபித்தனர். தலைவரது ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்பு, மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நலமுடன் முடிந்தது.

3. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் உடன் ஊழியர்களுடைய கூடுகை

2009, பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை உடன் ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

தலைமைப் போதகர் எம்.கே. சாம்சுந்தரம் அவர்கள், துதி ஆராதனையையும் செய்தியினை யும் பொறுப்பேற்று நடத்தினார்.

தலைமைப் போதகர், சங்கீதம் 134:1-3 வரை யுள்ள வசனங்களை மையமாகக்கொண்டு, "தேவனைத் துதிக்கும் ஊழியர்கள் எவ்விதம் செயல்படவேண்டும்?" என்னும் தலைப்பில் செய்தி அளித்தார்.

ஊழியர்கள் அசதி, தூக்கம் இவற்றைவிடுத்து, வெளியேவரவேண்டும் (சங்.134:1) என்றும், இராக்காலத்தில் எச்சரிக்கும் காவலாளராக விளங்கி, தேவனைப் போற்றிப் பாடித் துதிப்பவர்களாகக் காணப்படவேண்டும் (சங்.134:1) என்றும், எரிச்சல், பகை, கசப்பு, பொறாமை இவற்றை விடுத்து, பரிசுத்த கைகளை உயர்த்தி, தேவனைத் துதிப்பவர் களாக விளங்கவேண்டும் (சங்.134:2) என்றும், அப் போதுதான் வானத்தையும் பூமியையும் படைத்த தேவனால் ஊழியர்கள் ஆசீர்வதிக்கப்படுவர் (சங். 134:3) என்றும், விளக்கமாக எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர் மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நன்றே முடிந்தது.

News

'கணினி உலகில் சிறப்புத்திறன் உள்ளோருக்கே வெற்றி'

நமது எதிர்பார்ப்புக்கு ஏற்ப, கணினித் தமிழில் வளர்ச்சி ஏற்படவில்லை. பெரும்பாலானவர்கள் பட்டதாரிகளாக உருவாக்கப்பட்டாலும், அவர் களது சிறப்புத் திறமையைக் கொண்டே நிறுவனங் கள் பணிக்காகத் தேர்வு செய்கின்றன.

போட்டி நிறைந்த உலகில், யார் ஒருவர் சிறப்புத் திறமையைப் பெற்றிருக்கிறாரோ அவருக்கே அதிக வாய்ப்புகள் கிடைக்கும். எனவே, மாணவர்கள் கல்வி கற்பதோடு, சிறப்புத் திறமை யையும் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் ஆண்டுக்குச் சராசரியாக ஒரு லட்சம் மாணவர்கள் படிப்பின்போது, 'புராஜெக்ட் ரிப்போர்ட்' தயார் செய்கின்றனர். மாணவர்கள் இவற்றைத் தயாரிப்பதற்குச் சரியான ஊக்கமும், வழிகாட்டியும் இல்லாத நிலையில் உள்ளனர்.

இந்தத் திட்ட அறிக்கையைப் பணம் கொடுத்து வாங்கி சமர்ப்பித்தால், நாளை அது வெளியே தெரியவரும்போது நீங்கள் மோசடி நபராகச் சித்திரிக்கப்படுவீர்கள்; உங்களது வாய்ப்பு களும் பறிக்கப்படும். மாணவர்கள் தமிழ் கணினித் தொழில்நுட்பம் குறித்து, 'புராஜெக்ட் ரிப்போர்ட்' தயார் செய்தால் அந்தத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படும். இவற்றில் சிறந்தவற்றைத் தேர்வு செய்து, அரசு பரிசு வழங்கி ஊக்கப்படுத்தவேண்டும்.

இணையதளங்களில் ஆங்கில வழியில் நுழைந்து தமிழ் சேவையை அடைய வேண்டிய நிலை உள்ளது. இதை மாற்றி, தமிழ் வழியில் நுழைந்து, பிறமொழிகள் சேவையை அடையக் கூடிய அளவில் தமிழில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

மென்பொருள் துறையில் இந்திய மொழி களில் தமிழ்மொழிதான் முதலில் பயன்படுத்தப் பட்டது.

இணைய தளத்தில் தமிழ்மொழிக்கென ஓர் அகராதி உருவாக்கப்படவேண்டும்.

தினமலர் 13.2.2009

FORGIVEN

I have been forgiven, of all my ugly sins
I have been forgiven, I've been washed clean within.
My Dear LORD has saved me, from sin, and guilt, and shame;
Yes! I have been forgiven, I praise GOD's holy name.

I am a "New Creation", my heart's YESHUA's throne.
HE walks with me, and talks with me, I never am alone.
Yes, I have been forgiven! And I must do the same!!!
All others now, I must forgive, in YESHUA's name

I must forgive those people, who crushed and broke my heart.
As I forgive, YESHUA will give me a "brand new start".
I must forgive, and break the chains
that bind me hard and fast.
As I forgive, I'll be released, and I'll be free at last.

I must forgive, no matter what, and with GOD's help, I can.
I must forgive, and HE will make me, all that HE has planned.
YESHUA helps me overcome, HIS love is all I need,
I can forgive all others, as HE's forgiven me;

I will forgive, and gladly, I'll give it all to God.
HE is the judge of all the earth, for HIM, nothing's too hard.
I will forgive, and not give place, for Satan to come in.
I will forgive immediately, and not give way to sin.

"I have been forgiven", can I do any less?
I will forgive, and know for sure, my LORD in love will bless.
"I have been forgiven, and I will do the same."
YESHUA is the Victory, all glory to HIS NAME.